
விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 21 செவ்வாய்க்கிழமை (07.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 293

# அலுவலகத் திறப்பு விழாவில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்

## ஜானக பெரேரா உட்பட 28 பேர் பலி

## 86 பேர் காயம்; 15 பேரின் நிலை கவலைக்கிடம்

(அநுராதபுரம்)

அநுராதபுரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய அலுவலகத் திறப்பு விழாவின்போது நேற்றுக் காலை 8.45 மணியளவில் இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதலில், ஐக்கிய தேசியக் கட்சியின் வட மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உட்பட 28 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 86 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் 15 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (12 ஆம் பக்கம் பார்க்க)



## எம்.பியாகிறார் கருணா

(கொழும்பு)

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அறிவித்துள்ளார்.

நேற்று வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் இதுபற்றி அவர் அறிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நியமன எம்.பியான எச்.எம்.வசந்த சமரசிங்க இராஜினாமாச் செய்துள்ளதால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கே (12 ஆம் பக்கம் பார்க்க)

## சடலங்களின் சூடு தணிவதற்கு முன்னரே குற்றவாளியை இனங்கண்டது எவ்வாறு

## ஐ.தே.கவின் செயலாளர் கேள்வி

(கொழும்பு)

வடமத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவருக்கு விடுதலைப் புலிகள், கருணா தரப்பினர் மற்றும் அரசாங்க தரப்பு என முத்தரப்பிலிருந்து அச்சுறுத்தல்கள் இருந்தன.

எனினும் குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு பின்னர் சடலங்களின் சூடு தணிவதற்கு முன்னரே குற்றவாளியை இனங்கண்டது எவ்வாறு என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பினார்.

யாரால் செய்யப்பட்டிருந்தாலும் இந்த சம்பவத்தை ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாக கண்டிக்கின்றது (12 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஆய்வு அபிவிருத்திப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட

- க.பொ.த. (சா/த) பரீட்சை **கணிதம்** (வினாத்தாள்)
- க.பொ.த. (உ/த) பரீட்சை **உயிரியல்**

(பாட அலகு ரீதியான விளக்கம்)

# சுய கட்டுப்பாட்டை கடைப்பிடிக்க இலங்கைக்கு இந். வலியுறுத்தல்

(புதுடில்லி)

வட பகுதியில் இடம்பெறும் தற்போதைய மோதல்களில் தமிழ்ப் பொதுமக்கள் பலியாவது அதிகரித்து வருவதாக விபரித்து அது தொடர்பாக புதுடில்லிக்கான இலங்கைத் துணைத் தூதரை அழைத்து அவை தொடர்பிலான கரிசினைகளை இந்தியா வெளியிட்டுள்ளது.

இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனுக்கும் இலங்கை இராஜதந்திரியான பாலித கனேகொடவுக்கும் இடையிலான இந்தச் சந்திப்பில் இலங்கை பெரியளவில் சுயகட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் சிறுபான்மைத் தமிழ் மக்களிடையே அதிகரித்து வரும் பாதுகாப்பற்ற உணர்வுகளைப் போக்க முயற்சி செய்ய வேண்டும் என்றும் கேட்கப்பட்டதாக அதிகாரபூர்வ அறிக்கை ஒன்று கூறுகின்றது.

வடக்கில் தற்போது நடக்கும் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான மோதல்களில் 2 (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்லறித் தளங்கள் மீது விமானத் தாக்குதல்

(கொழும்பு)

கிளிநொச்சிப் பகுதியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் ஆட்லறித் தளங்கள் மீது ஜெட் ரக விமானங்கள் விமானத் தாக்குதல் நடத்தியதாகப் பாதுகாப்பு அமைச்சகம் செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்றுக் காலை 11.15 மணியளவில் கிளிநொச்சி நாச்சிக்குடாப் பகுதியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் ஆட்லறித் தளங்கள் மீது இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக விமானப் படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக நாணயக்கார தெரிவித்துள்ளார். (சு)

## வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் - யாழ்ப்பாணம்

| இரதோற்சவம் | | தீர்த்தோற்சவம் | | சுமங்கலி தீப பூஜை |
|---|---|---|---|---|
| 08-10-2008 | புதன்கிழமை | 09-10-2008 | வியாழக்கிழமை | 14-10-2008 செவ்வாய்க்கிழமை |
| வசந்தமண்டபப் பூஜை | காலை 08.00 மணி | வசந்தமண்டபப் பூஜை | காலை 08.30 மணி | பிற்பகல் 02.30 மணி |
| ஆரோகணம் | காலை 10.00 மணி | தீர்த்தோற்சவம் | காலை 10.00 மணி | கலந்து கொள்ளவுள்ள அடியார்கள் தங்கள் பதிவுகளை உறுதி செய்து கொள்ளவும். |

(1802)

இப் பெருவிழாவில் அடியார்கள் அனைவரையும் உற்சவங்களில் கலந்து நாராயணனின் பேரருள் பெற்று நிறை வாழ்வு வாழ வேண்டுகின்றோம்.

# அ'புரம் தற்கொலைத் தாக்குதலின் பின்னரான காட்சிகள்...



## பல்கலைக்கழக மாணவனுக்குப் பிணை

கொக்குவில் பகுதியில் கடந்த 2 ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீட மாணவர் உள்ளிட்ட மூவருக்கே பிணை வழங்கப்பட்டுள்ளது. பிணை வழங்குவது தொடர்பில் பொலிஸார் எதிர்ப்புத் தெரிவிக்காமையினால் தலா 20 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். (ச-5)

## வட மாகாண இ.போ.ச. குறைபாடுகளை நீக்குவதற்கான 2-ம் கட்ட உயர் மாநாடு

(கொழும்பு)

வடமாகாணத்திற்கான இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சாலைகளின் குறைபாடுகளை இனங்கண்டு அவற்றைத் தீர்த்து அப்பகுதிகளில் பொதுமக்களுக்கான போக்குவரத்தை சீர்செய்து உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் யாழ். மாவட்ட விஷேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் இரண்டாம் கட்ட உயர்மட்ட மாநாடு, கடந்த 3 ஆம் திகதி கொழும்பில் உள்ள சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சில் நடைபெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற இம்மாநர்ட்டில் போக்குவரத்து அமைச்சின் உயரதிகாரிகளும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் உயரதிகாரிகளும் யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னார். பேருந்து சாலைகளின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

வடமாகாண மக்கள் போக்குவரத்துச் சேவையை சீர்செய்து அதனை உறுதிப்படுத்தும் நோக்கில் முதலாவது உயர்மட்ட மாநாடு ஏற்கனவே கடந்த மாதம் 15 ஆம் திகதி இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் கட்ட மாநாட்டில் ஊழியர்கள் பற்றாக்குறை, உரிய வருமானம் இன்மையால் ஏற்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறை, பதவி உயர்வுகள் மற்றும் நிரந்தர நியமனங்கள், பேருந்து சாலைகளின் புனரமைப்புப் பணிகள்,சுற்றுவளவு பாதுகாப்பு வேலிகள், குடிநீர், போதிய பேருந்துகளுக்கு இயந்திரங்கள் உட்பட உதிரிப் பாகங்கள் இன்மை, மின்சார பிரச்சினை, தங்குமிட வசதிகள் இன்மை போன்ற பல்வேறு குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள் வவுனியா மற்றும் மன்னார் பேருந்து சாலைகளின் நிர்வாகத்தினர் சார்பில் முன்வைக்கப்பட்டது.

மேற்படி பிரச்சினைகள் தொடர்பில் போக்குவரத்து அமைச்சின் உயரதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அம் மாவட்டங்களில் பொதுமக்களது போக்குவரத்து சேவையில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்தும் விளக்கிக் கூறினர்.

இதனையடுத்து எட்டப்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைய மன்னார் பேருந்து சாலைக்கு 5 புதிய பேருந்துகளையும் 3 புதிய எஞ்ஜின்களையும் வழங்கவும் வவுனியா பேருந்து நிலையத்திற்கு 5 புதிய பேருந்துகளையும், 3 புதிய எஞ்ஜின்களை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டதுடன் ஏனைய அனைத்து பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு போக்குவரத்து அமைச்சும், சமூகசேவைகள் அமைச்சும் இணைந்து இணை அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

## இந்தியப் பிரதமருக்கான தந்திகள் குவிகின்றன

### இராமதாஸ், திருமாவளவன் ஆதரவு

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் மீதான இராணுவ தாக்குதலை தடுத்து நிறுத்த இந்திய அரசு தலையிடவேண்டும் என்று கோரி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தந்திகள் அனுப்புமாறு தமிழ்நாடு முதல்வர் கலைஞர் கருணாநிதி விடுத்த வேண்டுகோளை ஏற்று தமிழ்நாட்டில் இருந்து ஏராளமான பேர் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தந்திகள் அனுப்பி வருகின்றனர்.

அமைச்சர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள், தி.மு.க.நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் பிரதமருக்கு தந்திகளை அனுப்பினார்கள்.

இதேபோல் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தந்திகள்அனுப்பப்பட்டு வருகின்றன.

இலங்கைத் தமிழர்கள் மீதான தாக்குதலைத் தடுத்து நிறுத்த பிரதமருக்கு தந்தி அனுப்புமாறு முதலமைச்சர் கருணாநிதி கோரிக்கை விடுத்திருப்பதை பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் மருத்துவர் ராமதாஸ் வரவேற்றுள்ளார்.

பிரதமருக்கு தந்தி அனுப்புமாறு பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகிகளையும் தொண்டர்களையும் அவர் கேட்டக்கொண்டு இருக்கின்றார். இதேபோல் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர்கள் தொல்.திருமாவளவன் முதலமைச்சரின் வேண்டுகோளை வரவேற்றிருக்கின்றார்.

இலங்கைத் தமிழர்கள் மீதான தாக்குதலை தடுத்து நிறுத்த கோரி, விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் தமிழகம் தழுவிய அளவில் பிரதமருக்கு தந்திகள் அனுப்பப்படும் என்று அவர் கூறியுள்ளார். (ச-5)

## ஓய்வு வயதெல்லை நீடிப்பு இரத்து

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை நீடிக்கும் வகையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறு உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவின் தலைமையிலான நீதியரசர்களைக் கொண்ட குழுவினரே இந்தத் தீர்ப்பினை வழங்கியுள்ளனர்.

மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் தாக்கல் செய்த மனு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு மாற்றீடாக புதிய நடைமுறைகள் பரிந்துரைக்கப்படவுள்ளதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ச-5)

## புலிகள் சரணடைவதற்குமே யுத்த சூனியப் பிரதேசம்

### இராணுவப் பேச்சாளர்

(கொழும்பு)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேறுவதற்கும் புலி உறுப்பினர்கள் சரணடைவதற்குமே மோதல் தவிர்ப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

படையினர் கிளிநொச்சியை அண்மித்து வரும் இச்சந்தர்ப்பத்தில் மோதல் தவிர்ப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள விசுவமடு மற்றும் ஒட்டிசுட்டான் பாதைகளினூடாக புலிகள் நிராயுதபாணிகளாக வந்து இராணுவத்தினரிடம் சரணடையவேண்டும்.

இவ்வாறு சரணடையும் புலி உறுப்பினர்களை பாதுகாப்பாக பொறுப்பேற்பதற்கான அறிவுறுத்தல்கள் களமுனையிலுள்ள படையினருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் பிரிகேடியர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# இன்று ஒரு தகவல்

## உலகம் நல்லதா? கெட்டதா?

அந்தக் காலத்தில் எல்லாம் இப்படி அக்கிரமம் நடக்குமா? உலகம் ரொம்ப கெட்டுப் போய் விட்டது என்று அலுத்துக் கொண்டவர்களும் உண்டு.

அதே சமயம் இந்த உலகம் முன்னேறிவிட்டது. அடுத்த கிரகத்துக்குப் போய் வீடு கட்டலாமா என்று யோசிக்கும் அளவுக்கு வந்து விட்டோமே!என்று சொல்பவர்களும் உண்டு.

அது சரி!நிஜமாகவே இந்த உலகம் நல்லதா? கெட்டதா?

கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பாருங்கள். உங்களுக்கு ஏதாவது பதில் கிடைக்கிறதா?

அப்படி சரியாக ஒரு முடிவுக்கு வர முடியவில்லையானால் அதற்காக கவலைப்பட வேண்டாம்.

இராமகிருஷ்ணர் இந்தக் கேள்விக்கு ஒரு சின்ன கதை மூலமாக பதில் சொல்லியிருக்கிறார்.உலகம் நல்லதா? கெட்டதா? என்றுஒருவர் பெரியவரைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்.

அதற்கு அந்தப் பெரியவர் கேள்வி கேட்டவரையே நிமிர்ந்து பார்த்து ,

" அதற்கு நான் பதில் சொல்கிறேன். அதற்கு முன் நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்குப் பதில் சொல்!" என்றார்.

அதாவது பூனையின் பல் நல்லதா? கெட்டதா? என்று கேட்டார்.

இதைக் கேட்டதும் அவர் குழம்ப ஆரம்பித்தார். நாம் உலகம் நல்லதா?கெட்டதா?என்று கேட்டோம். அதற்கு இவர் பூனையின் பல் நல்லதா? கெட்டதா? என்று நம்மிடமே திருப்பிக் கேட்கிறாரே! என்று யோசித்தார்.

அவருக்கு ஒன்றும் புரியவில்லை ! அதற்குப் பின்பு அந்தப் பெரியவர் விளக்கம் கொடுத்தார்.

" ஒரு பூனைக்கு இருக்கின்ற பல் நல்லதா? கெட்டதா? என்றுகேட்டால் என்ன பதில் வரும்? யாரிடம் அந்தக் கேள்வியைக் கேட்கிறோமோஅதற்குத் தகுந்த மாதிரித் தான் பதில் வரும்"

இந்தக் கேள்வியை அந்தப் பூனையின் குட்டியிடம் கேட்டால் அது என்ன பதில் சொல்லும்.

"எங்கள் அம்மாவிடம் இருப்பது வெறும் பல் இல்லை அது கருணையின் வடிவம்.

அந்தப் பல் தான் எங்களை பாதுகாப்பான இடங்களுக்குத் தூக்கிச் செல்ல உதவும்.அது இல்லா விட்டால் நாங்களும்இல்லை!"என்றுதான்குட்டிப்பூனைபதில்சொல்லும்.

ஆனால் இந்தக் கேள்வியை ஒரு எலியிடம் கேட்டால் "பல்லா அது?எமன்!

கடவுள்பூனையைப் படைத்ததோடு விட்டிருக்க கூடாதா?எதற்காக பல்லையும் படைத்தார். குத்தூசி மாதிரி! அந்தப் பல்லின் கொடுமை என்ன என்பது கடிபடும் எனக்குத் தானே தெரியும்" என்று புலம்பும் எலி.

பூனையின் பல்லை குட்டி பார்ப்பது ஒருமாதிரி! எலிபார்க்கும் பார்வை ஒரு மாதிரி!

அதே மாதிரித்தான் உலகம் நல்லதா? கெட்டதா? என்று கேட்டால் இந்த உலகத்தின் தன்மையைப் பார்ப்பவர்களைப் பொறுத்தது அது.

இந்த உலகம் உள்ளவரை இதை நல்லது என்று சொல்பவர்களும் இருப்பார்கள். கெட்டது என்று சொல்பவர்களும் இருப்பார்கள்.

எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கும் இரண்டு பேர் சந்தித்துக் கொண்டார்கள்.

உங்கள் சந்தோஷத்துக்கு என்ன காரணம் என்று ஒருவரை மற்றவர் பார்த்துக் கேட்டார்.

" என் அத்தைப் பொண்ணு என்னைத் தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன் என்று உறுதியாகச் சொல்லி விட்டது. அது தான் நான் சந்தோஷமாக இருக்கிறேன்!" என்றார் அவர்.

" என் அத்தைப் பொண்ணு என்னைக் கல்யாணம் பண்ண மாட்டேன் என்று உறுதியாகச் சொல்லி விட்டது அது தான் நான் சந்தோஷமாக இருக்கிறேன்! என்றார் இன்னொருவர்

இரண்டும் இரண்டு விதமான பார்வை!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 2007இல் தோப்பூரில் காணாமல் போனவர்கள் தொடர்பாக விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கவும்

## நீதவான் நீதிமன்றத்துக்கு மேல் நீதிமன்றம் உத்தரவு

யுத்த சூழ்நிலையில் ஆயுத மேந்தியவர்களின் கைகளில் பொது மக்கள் காணாமல் போவது என்பது சர்வதேச குற்றம்அல்லது யுத்த குற்றம் என சர்வதேச நீதி மன்றச் சட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. காணாமல் போனவர்கள் தொடர்பாகத் தாக்கல் செய்யப்படுகின்ற ஆட் கொணர்வு மனுவானது, காணாமல் போனவர்களின் வாழ்வுரிமையைப் பாதுகாப்பதற்கும், அவர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்பதைக் கண்டுபிடிப்பதற்கும், குடும்பத்தினரின் மனரீதியான சித்தி ரவதையைப் போக்குவதற்கும் வழி வகுக்கும்.

ஆகவே காணாமல் போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட் டுள்ளவர்கள் தொடர்பான விசாரணைகளை முன்னுரிமை அடிப்படையில் விரைவாக நடத்தி அந்த விசாரணைகளின் கண்டு பிடிப்பு தொடர்பான அறிக்கையை மேல் நீதிமன்றத்திற்கு உடனடியாக அனுப் பி வைக்குமாறு, திருகோணமலை தோப்பூரில் 2007 ஆம் ஆண்டு காணாமல் போயுள்ள இருவர் தொடர்பாக திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு ஒன்றின் மீதான விசாரணையின் - பின்னர் திருகோணமலை நீதவான் நீதிமன்ற நீதிபதிக்கு திரு கோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலை பாலத்தடிச் சேனை தோப்பூர் மூதுரைச் சேர்ந்த 2 இளைஞர்கள் 2007 ஆம் ஆண்டு, படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளதாக இந்த ஆட் கொணர்வு மனுவில் குடும்ப உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

காணாமல் போயுள்ளவர்களில் ஒருவருடைய தாயாரும்,மற்றவருடைய மனைவியும் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

மனுதாரர்கள் இருவரும், தோப்பூர் 225 ஆம் பிரிகேட் தலைமையகக் கட்டளைத் தளபதி கேணல் ஜயந்த குணரட்ன என்பவரை முதலாவது எதிர் மனுதாரராகவும், நாட்டின் இராணுதளபதியை இரண்டாவது எதிர் மனு தாரராகவும், சட்டமா அதிபரை 3 ஆவது எதிர் மனுதாரராகவும் குறிப்பிட்டு இந்த ஆட் கொணர்வு மனுவை, தாக்கல் செய்துள்ளனர்.

முதலாவது எதிர் மனுதாரரின் பொறுப்பில் இருந்த பாலத் தோப்பூர் இராணுவமுகாம் வாசலில் இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டதை, காணாமல்போயுள்ளவர்கள்,காணாமல் போவதற்கு முன்னர் கடைசியாகக் கண்ட உறவினரான சாட்சி ஒருவர் இருப்பதாக, இந்த ஆட்கொணர்வு மனுவுடன் சத்தியக் கடதாசி அணைக்கப்பட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சத்தியக்கடதாசியின்படி, சம்பவ தினத்தன்று, மாலை 5.45 மணியளவில் இராணுவ முகாம் வாசலில் இருந்த சோதனைச் சாவடியை தான் கடந்து வந்தபோது, காணா மல் போனவர்கள் இருவரையும் இராணுவத்தினர் தடுத்து நிறுத்தி விசாரணை செய்துகொண்டிருந்ததைத் தான் கண்டதாகவும் அந்த சத்தியக் கடதாசியில் சாட்சியாகக் குறிப்பிட்டுள்ளவர் தெரிவித்துள்ளார்.

முதல் எதிர் மனுதாரராகிய லெப். கேணல் ஜயந்த குணரட்ன தனது சட்டத்தரணி ஊடாகப் பதிலி பத்திரம் (புறொக்ஸி), தாக்கல் செய்து தமது மனுவின் மூலம், "தம் மீது சுமத்தப் பட்டுள்ள குற்றச்சாட்டை மறுத்துரைத்துள்ளார்.

இரண்டாவது எதிர் மனுதாரராகிய இலங்கை இராணுவத் தளபதி லெப் ஜெனரல் தனது சட்டத்தரணி ஊடாகத் தாக்கல் செய்த எதிர் மனுவில் இந்த வழக்கின் முதலாவது எதிர் மனுதாரரோ அல்லது வேறு எந்த இராணுவத்தினரோ ஒரு சிவிலியனையும்,குற்றம்சாட்டப்பட்ட சம்பவம் நடை பெற்றதாகத் தெரிவிக் கப்பட்டுள்ள 4.4.2007 திகதியோ அல்லது அந்தக் காலத்திலோ, இந்த வழக்குடன் சம்பந்தப்பட்ட 2 நபர்களையும் தடுத்து வைக்கவோ கைது செய்யவோ இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

இந்த எதிர் மனுக்களை எதிர்த்து மீண்டும் மனுதாரர்கள் மாற்று சத்தியக்கடதாசி சமர்ப்பித்துள்ளனர். நீதிவிசாரணைக்கு உத்தர விடும் சந்தர்ப்பத்தில் அன்று என்ன நடந்தது என்பதை தன்னால் எடுத்து க்காட்ட முடியும் என்று மனுதாரரில் ஒருவர் தெரிவித்துள்ளார். அத்துடன் முதல் எதிர் மனுதாரர் சம்பவ தினத்தன்றும் அந்தக் கிழமையும் தான் விடுமுறையில் நின்றதாக மனுவில் தெரிவித்திருந்தமை சம்பந்தமாக தம்மால் எதுவும் கூறமு டியாது, எதிர் மனுதாரர் அந்தச் சந்தர்ப்பத்தில் விடுமுறையில் சென்றிருந்தாரா இல்லையா என்பது எமக்குத் தெரியாது. ஆனால் எனது மகன் கைது செய்யப்பட்டு காணாமல் போனதற்கு முதலாவது எதிர் மனுதாரின் இராணுவ முகாமில் கடமையாற்றிய இராணுவத்தினரே காரணம் என தனது பதில் மாற்று மனுவில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமது மனுவை ஏற்று விசாரணைக்கு உத்தர விடவேண்டும் என மன்றினை வலியுறுத் தியுள்ளார்.

இரு தரப்பு மனுக்கள் சத்தியக் கடதாசிகளை பரிசீலனை செய்த மேல் நீதிமன்ற நீதிபதி எம் இளஞ் செழியன், முதல் தோற்றளவில் மனுதாரின் குற்றச்சாட்டு விசாரணை மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்ததுடன்,இந்த விசாரணையை காலதாமதம் இல்லாமல் விசாரணை கண்டு பிடிப் புகள் பற்றிய அறிக்கையை மேல் நீதிமன்றத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு திருகோணமலை நீத வான் நீதிமன்ற நீதிபதிக்கு உத்தர விட்டுள்ளார். (அ)

## இராசி பலன்

07.10.2008
(புரட்டாதி 21, செவ்வாய்க்கிழமை)
அட்டமி பின்னிரவு 1.30மணிவரை
பூராடம் பின்னிரவு 1.47மணிவரை
இராகுகாலம் 3.02-4.32மணிவரை
சுபநேரம் 10.32-12.02மணிவரை

| | |
|---|---|
| மேடம் | சரீரப் பிரயாசை, பிரயாணம், கட்டுப்பாடு ,எதிர்பாராத செலவு |
| இடபம் | வீண்பகை, காரிய தடங்கல் , ஆரோக்கியக்குறைவு ,பொருள் விரயம் |
| மிதுனம் | களஸ்திர நன்மை ,தேகநலன் முயற்சிகைகூடும் ,சத்துருஜெயம் |
| கடகம் | எடுத்த காரியம் கைகூடும் , உற்சாகம் , பொருள் சேர்க்கை , மனமகிழ்ச்சி |
| சிங்கம் | கௌவரக்குறைவு ,தொழிலில் மந்த நிலை ,குடும்பக் கவலை , பணக்குறைவு |
| கன்னி | தன்னம்பிக்கைக்குறைவு ,உறவினர் சந்திப்பு,உடல் நலக் குறைவு ,தொழில் ஆரம்பம் |
| துலாம் | கூட்டு முயற்சி ,இனிய சம்பவம் , உறவினர் வருகை ,கீர்த்தி |
| விருச்சிகம் | முயற்சி தாமதம் , மனோ சங்கடம் ,தனவிரயம் ,போசன சுகக் குறைவு |
| தனுசு | நல்ல முயற்சி , தெய்வசிந்தை, சயனசுகம், தேக நலன் |
| மகரம் | சோம்பல் நிலை ,புத்திரரால் கவலை ,பிறருக்கு உதவுதல் , முயற்சி தாமதம் |
| கும்பம் | தனதானிய சேர்க்கை , காரிய சித்தி ,போசன சுகம் ,உடல் நலம் |
| மீனம் | தூரதேசச் செய்தி ,நன்கொடை , ஆரோக்கியம் , முயற்சி கைகூடும். |

வளவன்

# காயமடைந்த இராணுவத்தினர்களுக்கு சிகிச்சை அளிக்க வவுனியா வைத்தியசாலையில் வைத்தியர்கள் பற்றாக்குறை

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

வன்னி முன்னரங்கப் பகுதியில் இடம்பெற்றுவரும் மோதல்களில் காயமடையும் அதிகளவான இராணுவத்தினர் வவுனியா வைத்தி யசாலையில் அனுமதிக்கப்படுவதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், இவ்வாறு அனுமதிக்கப்படும் இராணுவத்தினர்களுக்கு சிகிச்சையளிப்பதற்குப் போதுமான வைத்தியர்கள் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வைத்தி யர்கள் தட்டுப்பாட்டால் வைத் தியசாலையில் அனு மதிக்கப்படும் பெரும் எண்ணிக்கையான காயமடைந்த இராணுவத்தினர்களுக்கு சிகிச்சையளிப் பதில் சிக்கல்கள் தோன்றியிருப் பதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் கூறியுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய இடங்களில்நடைபெற்றுவரும் மோதல் களில் காயமடையும் இராணுவத்தினர் வவுனியா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்படுகின்ற போதும் அவர்களுக்குச் சிகிச்சையளிப்ப தற்கு வவுனியா வைத்தியசாலையில் ஒரு சத்திரசிகிச்சை நிபுணரும், ஒரு மயக்க மருந்து செலுத்தும் நிபுணரும் மாத்திரமே காணப்படுவ தாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டாளர் வைத்தியர் உபுல் குணசேகர தெரிவித்தார்.

அரசசார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்புடைய இரண்டு சத்திர சிகிச்சை நிபுணர்கள் வைத்தியசாலையை விட்டுச்சென்ற பின்னர் சத்திரசிகிச்சை நிபுணரும் மயக்க மருந்து செலுத்தும் நிபுணரும் வைத்திய சாலையில் எந்நேரமும்கடமையில் இருக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கிளிநொச்சி மோதல்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கணிசமான அளவு காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் வைத்தியசாலை யில் 80 வைத்தியர்கள் மாத்திரமே உள்ளனர். இவ்வாறான சூழ்நிலையில் மேலதிகமான வைத்தியர்களும், பணியாளர்களும் அவசியம் என வைத்தியர் குறிப்பிட்டார்.

அத்துடன் வைத்தியசாலையுடன் தொடர்புடைய வைத்தியர்களுக்கான போதியளவு அடிப்படை வசதிகள் இல்லையெனவும் குறிப்பாக வைத்தியர்களுக்கான போக்குவரத்து வசதிகள் இல்லையெனவும் அரசாங் க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டாளர் தெரிவித்தார்.

இவ்வாறான அடிப்படை வசதி கள் சுகாதார அமைச்சினால் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் வவுனியா மற்றும் மன்னார் பகுதிகளில் கடமை யாற்றபல வைத்தியர்கள் முன்வருவார்கள் என்று வைத்தியர் உபுல் குண சேகர கூறினார்.

எரிபொருள் மானியம் வழங்கக் கோரி வவுனியா வைத்தியசாலை வைத்தியர்கள் கடந்த வாரம் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டிருந்தமையையும் அவர் நினைவு கூர்ந்தார் (அ-6)

## தேவாரப் பண்ணிசை வகுப்பு ஆரம்பம்

(நல்லூர்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் எதிர்வரும் 9ஆம்திகதி வியாழக்கிழமை விஜயதசமித் தினத்தன்று நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் இலவசத் தேவாரப் பண் இசை வகுப்பை ஆரம்பித்து தொடர்ந்து வார விடுமுறைத் தினங்களில் நடாத்தவுள்ளனர். (ஓ)

## மாணவர் கௌரவிப்பு

(சாவகச்சேரி)

சாவ.ப. நோ. கூ . சங்கத்தினரால் அதன் எல்லைப்பரப்பில் 2007 ல் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த. சா/த பரீட்சைகளில் சித்தியெய்தியோர் ஊக்கு விப்புப் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட வுள்ளனர்.

கௌரவிக்கப்படவுள்ள வர்களின் பெயர்விபரம் வருமாறு

**5ஆம்ஆண்டு புலமைப்பரிசில்**

சு.ஜனிதன் - சாவ.மகளிர் கல்லூரி, ம.திலக்சன்-மட்டுவில் கமலாசினி, பொ.தனுசிகா-மீசாலைவீரசிங்கம்வித்தி, அ.ஜெயசுதன்-மீசாலை கமலாம்பிகை வித்தி., இ.இராகவி -சாவ.இந்து ஆரம்பப் பாடசாலை, பு.யதுர்சன்- கைதடி நுணாவில் அ.த. க பாடசாலை

க . கீர்த்திகா- சரசாலை ஸ்ரீ கணேசா வித்தி., அ .தேனுஜா -சாவ. மகளிர் கல்லூரி, தி.மிதுசா-நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி., ஸ்ரீ.பிரியங்கன் -கல்வயல் ஸ்ரீச்ண்முகாநந்தா

**க.பொ.த.சாதாரண தரம்**

ஸ்ரீ.விசாகன்- சாவ .இந்துக் கல்லூரி, த.ஜெஜிதா-சாவ.இந்துக் கல்லூரி, க.கஜீவன்- மீசாலைவீரசிங்கம் வித்தி., த.குகதீஷன்-மீசாலை வீரசிங்கம் வித்தி., ம. றதிக்கா-சாவ. மகளிர் கல்லூரி,

கௌ. சர்மிளா- மீசாலை விக்னேஸ்வரா வித்தி., பா.நிரூபா- சரசாலை ஸ்ரீகணேசா வித்தி.,கா.நிசாந்தன்- சாவ. டிறிபேக் கல் லூரி, சி.வேணுமதி -மட்டுவில் சந்திரமௌ லீசா வித்தி., தி.அஜந்தன் -மட்டு வில் சரஸ் வதி வித்தி., வீ. விஜயரூபி-கைதடி நுணா வில் அ.த.க.பாடசாலை. (ஓ-29)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட அரியாலை - கொழும்புத்துறை பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (A.R.V.) இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரைA.Vறோட், மிருக வைத்தியர் அலுவலகத்திலும், பிற்பகல் 2 மணி முதல் 3.30 மணி வரை பொன்னம்பலம் வீதி கலை வாணி சனசமூக நிலையத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு. யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தீவகப் பிரதேசத்திற்கான நவராத்திரி விழா -02 சரவணை செல்லக் கதிர்காம முருகன் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சின்ன மடு றோ.க.த.பாடசாலை அதிபர் கே.சண்முகம் பிள்ளை, சிறப்பு விருந்தினராக சரவணை கிராம சேவகர் திருமதி க.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் "சக்திவழிபாடுகளில் நவராத்திரி" எனும் விடயம் பற்றிய யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் பொ.சந்திரவேலின் சிறப்புச் சொற்பொழிவும், சரவணை செல்லக் கதிர்காமம் முருகன் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (ஓ)

## சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்


உறுப்புரை- 7

எல்லோரும் சட்டத்தின் முன்னர் சமமானவர்கள் என்பதுடன் பாரபட்சம் எதுவுமின்றி சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கும் உரித்துடையவர்களாவர்.

# வலி வடக்கு கலாசாரப் பேரவை; மாபெரும் வர்ணப் புகைப்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையால் யாழ்ப்பாண நாட்டில் வாழ்ந்த மறைந்த சித்தர்கள் , ஆக்க இலக்கிய சமூக சேவைப் புலமையாளர்கள் ,பல் துறைக் கலைஞர்கள் , மாட்டுவண்டிச் சவாரிக்காரர்கள், சாதனையாளர்கள் என 410பேரினுடைய வர்ணப் புகைப்படங்களும் அவர்களது வாழ்க்கைக் குறிப்புகள் மற்றும் யாழ்ப்பாணத்தின் தொன்மையை எடுத்துக் காட்டும் மத வழிபாட்டுத் தலங்கள், வாழ்வியல் கலை கைப்பணிப் பொருட்கள்,பாரம்பரிய சடங்குகள் போன்ற பல்வேறுபட்ட விடயப் பரப்புகளை உள்ளடக்கியதான "மாபெரும் வர்ணப் புகைப்படக் கண்காட்சி -யாழ்ப்பாணப் பெட்டகம்-1" எதிர்வரும் 15ஆம், 16ஆம் ,17ஆம் திகதிகளில் வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தினமும் காலை 9மணி முதல் 4மணி வரை இடம் பெறவுள்ளது. (அ)



தெல்லிப்பளை அருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி ஆலய வருடாந்த இரதோற்சவ நிகழ்வில் அம்பாள் இரதத்தில் ஆரோகணித்து விதிவலம் வருவதைப் படத்தில் காணலாம்.

# யாழ். கல்விவலய சதுரங்க சுற்றுப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட சதுரங்க சுற்றுப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்களை யாழ் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) க.குமாரசுவாமி அறிவித்துள்ளார்.

**தரம் -4 தனிநபர் போட்டிகள்**

**ஆண்கள்**

சு.செந்தூரா- யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை,ஞா.அனோஜன் -யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை,கு. சாரூஜன்- புனித ஜோன் பொஸ்கோ வித்தி.

**பெண்கள்**

ந.வித்தியா -புனித ஜோன் பொஸ்கோ வித்தி.,யோ .லாவண்யா-யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை,அ. ஆதித்தியா-யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

**தரம் 5 குழுப் போட்டிகள்**

**ஆண்கள்**

புனித ஜோன் பொஸ்கோ வித்தி.,யாழ். இந்து ஆரம்ப பாடசலை, கொக்குவில்இந்து ஆரம்ப பாடசாலை.

**பெண்கள்**

யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை , கோப்பாய் நாவலர் வித்தி., கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

**13வயதின் கீழ்**

**ஆண்கள்**

சென் ஜோன்ஸ் கல்லூரி , யாழ்.மத்திய கல் லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி.

**பெண்கள்**

கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி. , யாழ். இந்து மகளிர் கல்லூரி ,வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. (ஓ)

# சுதுவை ஆண்டு மலர் வெளியீடு




சுதுமலை ஈஞ்சடி நாவலர் பாலர் பாடசாலையின் 2008 ஆம் ஆண்டு விழா மலர் "சுதுவை" சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் கந்தையா ஸ்ரீ நந்தகோபனால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இப் பாடசாலையின் ஆண்டு மலர்கள் 2005ஆம் ஆண்டு முதல் "சுதுவை" என்ற பெயரில் பிரதேசத் தகவல்களுடன் கல்வி சார் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது. இம்முறையும் நிர்வாக சபையின் உயர் நோக்கோடு பேராசிரியர் சபா ஜெயராசா, கலாநிதி ஜெ. இராசநாயகம், யாழ். தேசிய கல்வியற் கல்லூரி உப பீடாதிபதி தனபாலன், திருமதி பி. அம்பிகைபாலன், ஈ.குமரன், க.ஸ்ரீ கணேசன், ஆறு திருமுருகன், ந. குகபரன் ஆகியோரின் கல்விசார் கட்டுரைகளும், இதற்கு ஊக்கமளிக்கும் பெரியோர்களின் வரலாற்றுக் குறிப்புகளும் அடங்கியதாக அமைக்கப் பெற்றுள்ளது. (ஓ)

## காரைநகர் பஸ், துறைமுகம் வரை வராததால் பயணிகள் அவதி

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பயணிகள் காரைநகர் துறைமுகத்திலிருந்து இ.போ.ச. டிப்போ வரை நடந்து செல்வதால் நேர காலத்தில் பஸ் எடுக்க முடியாது சிரமப்பட்டு வருகின்றனர். முன்பு காரைநகர் பஸ் துறைமுகம் வந்து பயணிகளை ஏற்றிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (அ-72)

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

**கரணவாய் மகா வித்தியாலயம்**

வி. சாளினி - 137

ம. கிருசிகா - 129 (ஓ)

## வாணி விழா

வடமராட்சி வலயக் கல்வி அலுவலக ஊழியர் நலன் புரிச்சங்கம் நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு வாணி விழாவைக் கொண்டாட உள்ளது என நலன்புரிச் சங்கத் தலைவரும் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான சி. நந்தகுமார் அறிவித்துள்ளார். (ஓ-19)

◆◆◆

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடாத்தும் வாணிவிழாவின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணி முதல் 6 மணிவரை நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் மன்ற மாணவிகளின் வயலின் இசையும் தொடர்ந்து குழு இசையும் இடம் பெறும். அடுத்து ஆர். இராதாகிருஷ்ணன், மு.குகபரன்,செல்வி யோ.கார்த்திகா ஆகியோரின் வயலினிசையும், நல்லைக் கலாமந்திர் மாணவிகள் வழங்கும் "நாட்டியாஞ்சலி" நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் 9 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4மணிக்கு மன்றத்தில் குரலிசை, வீணை, வயலின்,மிருதங்கம்,பரதநாட்டியம் ஆகிய கலை வகுப்புகளுக்கான வித்தியாரம்பம் இடம்பெறும். பயில விரும்புவோர் மன்றப் பணிமனையில் தம் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம் என இளங்கலைஞர் மன்றம் அறிவித்துள்ளது. (ஓ)

◆◆◆

(ஊர்காவற்றுறை)

புங்குடுதீவு ஸ்ரீ கணேசா மகாவித்தியாலய வாணி விழா வித்தியாலயப் பிரதான மண்டபத்தில் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் எஸ்.கே. சண்முகலிங்கம் ஜே.பி.தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் ,சிறப்பு விருந்தினர்களாக இளைப்பாறிய அதிபரும் ,புங்குடுதீவு சிவநெறிக்கழக தலைவருமான ந.இராசதுரை, இளைப்பாறிய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.தவராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

விழாவில் சொற்பொழிவுகள் மற்றும் குழு நடனம், கோலாட்டம், நாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகளுடன் "மனிதனை வாழ் வாங்கு வாழ வைப்பதற்கு பெரிதும் உதவுவது கல்வியா? செல்வமா?" எனும் தலைப்பினைக் கொண்ட பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளது. (ஓ)




## முதியோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெற்று வரும் சர்வதேச முதியோர் தினவிழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் க.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் சிவஸ்ரீ யோ, குருசாமிக் குருக்கள், சாவகச்சேரி பங்குத்தந்தை தயாகரன் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

தொடர்ந்து சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளின் குழுநடனம், குழுப்பாடல், யாழ்.மத்திய கல்லூரி மாணவர்களின் "மனித விழுமியங்கள் பேணப்படுகின்றன", "பேணப்படவில்லை" எனும் தலைப்பிலான பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் நடுவராக யாழ்.மத்திய கல்லூரி தமிழ் ஆசிரியர் நாக. புவனேந்திரன் பணியாற்றுவார். (ஓ)

# நோத்முதல் கோபல்லவா வரை 119



**சேர் .பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் (14.09.1853-09.01.1924)**

முன்னர் அருணாசலத்தின் தாய் மாமனாராய சேர்.முத்துக்குமாரசுவாமி 1851 ஆம் ஆண்டிலே ஈட்டிய பரிசை, அருணாசலம் 1870 ஆம் ஆண்டிற் பெற்றுக் கொண்டார். பின்னர் அருணாசலம் அவர்களின் மைந்தர் மகாதேவா 1903 ஆம் ஆண்டில் அப்பரிசைப் பெற்றார்.அவரின் மைந்தர் பாலகுமார் அப்பரிசை 1938 ஆம் ஆண்டிற் பெற்று நான்கு தலைமுறைகளின் கல்வித் தரத்தை நிரூபித்து விட்டார்.

அருணாசலம் மாணவராயிருந்த காலத்தில் அவரைக் கற்பித்த கலாநிதி பியர் குறவ்ற்போக் என்னும் ஆங்கிலேயர் அருணாசலத்தைப் பற்றி எழுதிய அறிக்கையில் "நான் என்னுடைய நாற்பதாண்டு ஆசிரியத்தொழில் அனுபவத்தில் அருணாசலத்தைப் போன்ற திறமையுள்ள மாணவர் ஒருவரைக் கண்டதில்லை. இவருடைய படிப்பும் நல்லொழுக்கமும் சிறந்த தரத்தவை. இவருக்கு மிகுந்த சிறப்போடு கூடிய எதிர்காலம் உண்டு என்று நான் திடமாக நம்புகின்றேன்" என்று எழுதியுள்ளார்.

அருணாசலம் சர்வகலாசாலை உபகாரப் பரிசைப் பெற்று இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிஜ் சர்வகலாசாலைக்குப் போன போது, இலங்கையில் வித்தியாதிகாரியாயிருந்த வால்ரர் சென்டல் என்னும் ஆங்கிலேயர் தமது நண்பர்களுக்கு அருணாசலத்தின் திறமையைப் பற்றி அறிமுகஞ் செய்து, "கிழக்கு நாடுகள் என்றுங் கண்டிராத மெத்தப் பெரிய விவேகி இவர். இவருக்கு ஆவனசெய்து ஊக்கப்படுத்துக" என்று எழுதினார்.

## மீள் பார்வை

அருணாசலம் கேம்பிரிஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த கிறைஸ்ற் கல்லூரியிலே பிரசித்தி பெற்ற பேராசிரியர்களிடத்திலே பாடங்கேட்டார். அச் சர்வகலாசாலையிலே திறமையுடன் பட்டம் பெற்றுக்கொண்ட பின் சீமை அப்புக்காத்து எனப்படும் பாரிஸ்ரர் பட்டமும் பெற்று இலங்கைக்கு மீண்டு சுதந்திரமாகத் தொழில் நடத்த விரும்பினார்.

ஆனால் அவருடைய மாமனாராய சேர். முத்துக்குமாரசுவாமி அருணாசலம் இலங்கைச் சிவில் சேவிஸ் என்னும் C.C.S. பரீட்சையில் தேறிப் பொறுப்பு வாய்ந்த பெரிய உத்தியோகத்திலே பெருமையுடன் இருத்தல் வேண்டும் என்று விரும்பினார். ஆகவே அருணாசலம் தமது 22ஆவது பராயத்தில் அதுகாறும் வெள்ளைக்காரரே அருகதை உள்ளவராயிருந்த C.C.S. பரீட்சையில் மிகத் திறமையுடன் சித்திபெற்றார். இலங்கைச் சரித்திரத்தில் இலங்கையர் ஒருவர் முதன் முதலாக C.C.S. பதவியில் அமர்ந்த பொன்னாள் 3.4.1875 என்பர். அப் பெருமை அருணாசலத்துக்கே உரியது.

அருணாசலம் இலங்கையின் முன்னேற்றத்துக்காகப் பல துறைகளிலும் அயராது ழைத்தார். அவருடைய உபகரிப்பைப் பெறாத துறை இல்லை என்றே கூறலாம். அவர் அரச சேவை, அரசியற் சீர்திருத்தம், சட்டம்,நீதி, புள்ளிவிபரவியல்,சமூகசேவை,விவசாயம், கல்வி, சரித்திரம், கலை, புதைபொருள் , தத்துவம், சமயம் ஆகிய துறைகளில் அரிய சேவை செய்துள்ளார்.

அருணாசலம் 1886 ஆம் ஆண்டு முதலாக மாவட்ட நீதிபதியாயும், மேல் மாகாண நீதிவாரியாயும் கடமையாற்றிய பின்,அவர் 1901 ஆம் ஆண்டில் குடிசன மதிப்பு அறிக்கையைத் தயாரித்துள்ளார். அதிலே நானாவிதமான புள்ளிவிபரங்கள் நல்ல முறையில் அமையும் வண்ணம் எழுதப்பட்டுள்ளன. அவ்வறிக்கையைக் கண்ட அமெரிக்கவாசிகள், தங்கள் நாட்டகத்தே அத்தகைய முறையில் அவ்வறிக்கையைத் தயாரிக்கக் கூடிய விற்பத்திமான்கள் இல்லை என்றும்,அருணாசலத்தின் அறிக்கை வெறும் விபரப்பட்டியல் அல்லவென்றும்,அது பாரம்பரியப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் பாரிய இலக்கியப் படைப்பு என்றும் பலவாறாகப் புகழ்ந்தார்கள்.

அருணாசலம் தாயரித்த அவ்வறிக்கையை உலக நாடுகள் வெகுவாகப் பாராட்டின. லண்டன் ரைம்ஸ் என்னும் பத்திரிகை, "இலங்கை வாழ் மக்களுடைய வரலாறு, சமயம்,மொழி,இலக்கியம் என்பன சம்பந்தமான வரலாறுகளைக் கூறும் ஆதார பூர்வமான ஓர் அரிய நூல் என்று இதனைச் சொல்லவேண்டும்" என்று பாராட்டி எழுதியது.

இன்று இலங்கைச் சர்வகலாசாலையில் விரிவுரையாளராயும்,மேற்சபை அங்கத்தவராயும்,தலைசிறந்த அரசியல் ஞானியாயும் உள்ள தோடர் டொறிக் சூசாவின் தந்தையார் ஆமண்டிசூசா அக் காலத்தில் மோனிங் லீடர் என்னும் பத்திரிகையில் அருணாசலத்தின் அறிக்கையைப் பாராட்டி, "இலங்கையின் பொருளாதார சமுதாய நிலைமைகளையும், இனப் பாகுபாடுகளையும் தெளிவாக ஆராய்ந்து காட்டும் ஓர் அரிய நூல். இதில் இலக்கிய நயம் ததும்புகின்றது.

ஆங்கிலம் வல்ல அடிசனின் அழகு நடையும், சரித்திரம் வல்ல மக்காலே பிரபுவின் வீரநடையும், ஆராய்ச்சிப் புலமை வாய்ந்த மொம்சனின் ஆணித் தரமான நடையும் அருணாசலத்தின் நடையில் ஒன்றுசேர்ந்து மிளிர்கின்றன" என்று எழுதியுள்ளார். (தொடரும்)

**க.சி.குலரத்தினம்**









சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு "துளிர்கள்" நிறுவனத்தின் ஏற்பாட்டில் முதியோர்களைக் கௌரவிக்கும் செயற்பாடுகள் அண்மையில் கைதடி முதியோர் இல்லத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் துளிர்கள் நிறுவன இயக்குநர் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், கலந்து சிறப்பித்த விருந்தினர்களை இரண்டாவது படத்திலும் மற்றும் முதியோர்களை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# எமது பாரம்பரிய பிரதேசத்திற்குப் பொருத்தமான மாற்றுச்சக்தி வளங்கள்: ஒரு புவியியல் நோக்கு 4

**காற்றுச் சக்தி வளம் தொடர்ச்சி**



டென்மார்க், நெதர்லாந்து, ஜேர்மனி, சுவீடன், பிரித்தானியா போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் சோமாலியா,இந்தியா,சீனா போன்ற மூன்றாம் உலக நாடுகளிலும் காற்றுச் சக்தி வளம் கணிச மான அளவில் பயன்படுத்தப் பட்டு வருகின் றது.

இதனைப் பரவலாகவும்,மலிவாகவும் பயன்படுத்த வழிகாணும் ஆய்வுகளும் தொடர்கின்றன. உலகில் 2000 ஆம் ஆண்டில் காற்றாலை மூலம் 23,300 மெ.வாட்ஸ் மின்சார சக்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. இன்று காற்றாலைச் சக்தி வளப்பாவணையில் ஜேர்மனி முதலிடம் வகிக்கின்றது.

ஜேர்மனியில் எழுபது நிறுவனங்கள் காற்றாலை அமைப்புத் துறையில் ஈடுபட்டுள்ளன. டென்மார்க்கில் தேசிய மொத்த சக்தி நுகர்வில் 18 வீதம் காற்றாலை மூலம் பெறப்படுகின்றனது. ஸ்பெயின் நாட்டில் தேசிய மொத்த சக்தி நுகர்வில் 2010 ஆம் ஆண்டில் 12 வீதம் காற்றாலை சக்தி மூலம் பெறப்படவுள்ளதாகக் கணிப்பிட்டுள்ளார்கள்.

காற்றாலைகளை நிறுவக்கூடிய உள்ளார்ந்த வளங்களை உலகிலேயே அதிகளவு கொண்ட நாடாக ஐக்கிய அமெரிக்காவே விளங்குகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் மூன்று மாநிலங்களான வடடகோட்டா, கன்சாஸ், ரெக்ஸாஸ் என்பனவற்றில் காற்றாலையமைத்துப் பெறக்கூடிய சக்தி வளம் ஐக்கிய அமெரிக்க முழுமைக் கும் மின்சார சக்தியை வழங்கப் போதுமானதெனக் கணிப்பிட்டுள்ளார்கள். இந்தியாவும் காற்றாலைகளை நிறுவி சகதிவளம் பெறத்தக்க பல திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு, கேரளா, கன்னடம், ஆந்திரா ஆகிய மாநிலங்கள் காற்றாலைகளை உருவாக்கப் பொருத்தமான பகுதிகளைக் கொண்டுள்ளதோடு இம் முயற்சியில் பெரிதும் ஈடுபாடும்காட்டிவருகின்றன. நாமொன்றின் காற்றுச் சக்தி வளப்பயன்பாட்டுத் திட்டத்திற்கு உள்ளூர் காற்றின் தன்மை, வேகம்,காற்று வீசும் திசை,உயரம் போன்றன துல்லியமாக அளவிடப்படுதல் வேண்டும். இவை காற்றுப் பற்றிய தரவுக ளாக அமையும். இத்தரவுகளைக் கொண்டு காற்றுக்காலநிலைத் தேசப்படம் உருவாக் கப்படுதல் இன்றியமையாததாகும்.

எமது பிரதேசத்தில் அமைந்துள்ள வளிமண்டலவியல் நிலையங்கள் இத் தரவுகளையம் முறையாகத் திரட்டி வருதல் வேண்டும்.

2.2. எமது பிரதேசத்தில் பெரும்பரப்ப சமதரையாக விளங்குகின்றது. கடற்கரையோரப் பகுதிகளிலேயே பெருமளவு குடித்தொகை செறிந்துள்ளதோடு குறிப்பிடக் கூடிய நகரங்கள் பலவும் கடற் கரையோரமாகவே பரந்துள்ளதை அவதானிக் கலாம். இவ்வம்சங்கள் காற்றாலைகளை அமைப்பதற்குச் சாதகமானவையாக உள.மேலும் வடகீழ் மாகாணங்களில் மே முதல் செப்டம்பர் வரை தென்மேற்கு மொன்சூன் காற்று வேகம் கொண்ட வரண்ட காற்றாக வீசுகின்றது. இது வடக்கே "சோளக்காற்று" என்றும் கிழக்கே "கச்சான் காற்று" என்றும் வழங்கப்படுகின்றது.



டிசம்பர் முதல் பெப்ரவரி வரை இந்தப் பிரதேசங்களில் வடகீழ் மொன்சூன் காற்று வீசுகின்றது.

இவற்றுக்கு இடைப்பட்ட மாதங்களாகிய ஒக்டோபர்,நவம்பர்,மார்ச், ஏப்பிரல் மாதங்களில் காற்று வீச்சு குறைவே. எனினும் இம் மாதங்களில் சூறாவளிக் காற்றும் கடற்கரையோரப் பகுதிகளில் "கொண்டல்" காற்றும் இடையிடையே வீசுகின்றன.

மேற்படி காற்று வீச்சைப் பயன்படுத்தி எமது பிரதேசத்தில் ஆங்காங்கே காற்றாலைகளை அமைக்க முடியும். இதனைத் தேச சக்திவள நிர்மாணத் திட்டத்துடன் இணைந்து உருவாக்குதல் நல்ல பயன் தருமென துணிந்து கூறலாம்.

குளங்கள், கிணறுகளிலிருந்து விவசாய நிலங்களுக்கு நீரிறைப்பதற்கும்,நகர,கிராம மின்சார உற்பத்திக்கும் காற்றா லை அமைப்புகள் உதவிட முடியும்.முயற்சியுள்ளோர் தனிப்பபட்ட வீடுகளில் கூட சிறிய காற்றாலைகளை அமைத்து நீரிறைப்பதோடு மட்டுப்படுத்தப்பட்டளவில் வீட்டு மின்சார தேவைகளையும் பூர்த்தி செய்யமுடியும். (தொடரும்)


**பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்**
தலைவர் ,சமூகவியல்துறை
இணைப்பாளர்,புறநிலைப்படிப்புகள் அலகு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## க.பொ.த. சாதாரண பரீட்சை 2008 - பயிற்சி வினாத்தாள்

பகுதி A பரீட்சை I நேரம் -40 நிமிடங்கள்


### A — Answer

1. 3/4 என்ற பின்னத்தில் தொகுதி எண் ..............................
2. 3.1 + 2.6 ..............................
3. [1000g = 1kg] 2kg 50g =□g ..............................g
4. a உடன் 3 ஐக் கூட்ட வரும் கோவை ..............................
5. $32^0 + 58^0$ ..............................$^0$
6. $2^4$இல் சுட்டி ..............................
7. 𝍸 II
8. a+a+a= ..............................
9. A= {1,3,5} எனின், n(A) ..............................
10. நான்முகியொன்றின் முகங்களின் எண்ணிக்கை ..............................

### B — Answer

1. ஏழில் ஆறு என்ற பின்னத்தை இலக்கங்களில் எழுதுக. ..............................
2. சுருக்குக.
   3.45+ 1.32 ..............................
3. 1 1/2 கிலோகிராமை கிராமில் தருக. ..............................g
4. a இன் இரு மடங்கிலிருந்து ஐந்தைக் கழிக்க வரும் கோவையைக் குறியீட்டால் தருக. ..............................
5. $42^0$ இன் நிரப்புகோணத்தைத் தருக. ..............................$^0$
6. a x a x a x a ஐ சுட்டி வடிவில் எழுதுக. ..............................
7. படவரைபொன்றில் ஒரு உரு 100ஐ வகை குறிப்பின், 3 1/2 உரு எத்தனையை வகை குறிக்கும். ..............................
8. சுருக்குக. 2a+5a+3a
9. P={2,3,5,7} ஆகும். இடை வெளிகளில் பொருத்தமான குறியீடுகளை இட்டு எழுதுக.
   a) 5..............P b)9............... P
   a)................ b)..................
10. 1,2,3,4 எனும் எண்க்ளைத் தனது முகங்களிற் கொண்ட சமச்சீரான நான்முகியொன்று சுண்டப்படுகிறது. மாதிரிவெளியை எழுதிக் காட்டுக. ..............................

### C — Answer

1. $\frac{3}{4}\ \frac{1}{3}\ \frac{2}{5}\ \frac{1}{7}\ \frac{3}{5}$
   இவற்றில் எவை அலகுப் பின்னங்கள் ..............................
2. சுருக்குக. 16.8 + 3.15 ..............................
3. 2 kg 750g ஐயும் ; 1 kg 500g ஐயும் கூட்டி விடையை kgஇல் தருக. ..............................kg
4. ஒரு பஸ்சில் இருந்த X பயணிகளில் 4 பேர் இறங்கினர் எஞ்சிய பயணிகள் எத்தனை பேர்?. ..............................
5. 

   தகவல்களுக்கு ஏற்ப < ABC ற்கு மிகை நிரப்பியாய் அமையும் கோணத்தைப் பெயரிடுக ..............................
6. வெற்றுக் கூட்டினுள் பொருத்தமான எண்களைப் பெயரிடுக.
   $81 = 9^{\square} = \square^4$ ..............................


ஜே.மரியநாயகம்


7. ஒரு சிறிய கிராமத்திலுள்ள மொத்த குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கையை இவ் வரவுக்குறி அட்டவணை காட்டுகிறது.

| பிள்ளைகளின் எண்ணிக்கை | வரவுக்குறி |
|---|---|
| 0 | 𝍸 |
| 1 | 𝍸 𝍸 II |
| 2 | 𝍸 𝍸 𝍸 II |
| 3 | 𝍸 𝍸 |
| 4 | 𝍸 II |

   a) கிராமத்திலுள்ள மொத்த குடும்பங்கள் எத்தனை? ..............................
   b) எத்தனை குடும்பங்களுக்கு பிள்ளைகள் எவரும் இல்லை? ..............................
8. சுருக்குக. 2a+4+5a+1
9. பின்வரும் தொடையின் மூலகங்களை எழுதுக.
   {73722 என்ற எண்ணில் உள்ள இலக்கங்கள்} ..............................
10. சமச்சீரான நாணயமொன்றும், 1,2,3,4 எனும் எண்களை தனது முகங்களிற் கொண்ட சமச்சீரான நான்முகி தாயக்கடை ஒன்றும் சுண்டிவிடப்படுகின்றன. மாதிரிவெளியை எழுதிக் காட்டுக. ..............................

### D — Answer

1. சுருக்குக.
   1/5 + 2/5 ..............................
2. பெறுமானம் காண்க. 10.72 + 3.391 + 0.224 ..............................
3. வெற்றுப் பெட்டியின் திணிவு 1kg 200g, இதனுள் 9kg 800g திணிவுள்ள மாஜரின் அடுக்கப்பட்டுள்ளது. மாஜரினைக் கொண்ட பெட்டியின் மொத்த திணிவைக் காண்க. ..............................kg
4. 3,6,9 .....y எனும் எண்கோலம் எழுதப்பட்டுள்ளது.
   a) y இற்கு முன்னுள்ள எண்ணை எழுதுக.
   b) y இற்கு பின்னுள்ள எண்ணை எழுதுக.
5. [ஒரு நேர்கோட்டின் மீதுள்ள அடுத்துள்ள கோணங்களின் கூட்டுத்தொகை $180^0$]


   உருவில் தரப்பட்டுள்ள தகவல்களுக்கிணங்க X ஐக் காண்க. ..............................
6. 720 ஐ முதன்மை எண்களின் வலுக்களின் பெருக்கமாக எழுதுக. ..............................
7. குறித்த ஒரு நாளில் வகுப்பொன்றிலுள்ள மாணவர்கள் பாடசாலைக்கு வருகைதந்த முறைகளை இச்சலாகை வரைபு காட்டுகிறது.


   அன்றைய தினம்,
   a) எத்தனை மாணவர்கள் சைக்கிள் மூலம் வந்தனர்?
   b) மொத்தமாக இவ் வகுப்பில் எத்தனை மாணவர்கள் உள்ளனர்?
   a).......................... b)..........................
8. அடைப்பு நீக்கிச் சுருக்குக.
   3 (a+2) + 8 ..............................
9. a) {2,3,5} எனும் தொடைக்கு எத்தனை தொடைப்பிரிவுகள் எழுதலாம்?
   b) பொருத்தமான குறியீட்டின் மூலம் இடைவெளியை நிரப்புக.
   {3,6}..................{மூன்றின் மடங்குகள்}
   a).......................... b)..........................
10. சமச்சீரான நாணயமொன்றும் 1,2,3,4 எனும் எண்களைத் தனது முகங்களிற் கொண்ட சமச்சீரான நான்முகியொன்றும் ஒருங்கே சுண்டிவிடப்படும் போது, நாணயத்தின் தலையும், நான்முகியில் ஒற்றை எண்ணும் தோன்றுவதற்கான நிகழ்தகவு யாது? ..............................

| | A | B | C | D | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | | | | | |

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு
## க.பொ.த. உயர்தர பரீட்சை 2009
## பாட அலகு ரீதியான விளக்கங்கள்

ரி. பாலசுப்பிரமணியம்

01

## உயிரியல்

### குருதி இழையம்

பெருமளவிலான தாயத்தையும் அத்தாயத்திலே ஐதான நிலையில் கலங்களையும் நார்களை ஆக்கும் முன்னோடிப் புரதங்களையும் கொண்ட கொண்டு செல்லல் தொழிலைப் புரிகின்ற தொடுப் பிழையமே குருதி இழையமாகும்.

வகையான தொடுப்பிழையம் ஒன்றில் இருந்து இது மிக அதிகளவில் வேறுபாட்டைக் காட்டும் தொடுப்பிழையம் ஆகும்.

**குருதியைத் தொடுப்பிழையமாகக் கருதுவதற்கான காரணங்கள்:**

1. இடைத் தோற்படை உற்பத்திக்குரியது.
2. பெருமளவிலான தாயத்தைக் கொண்டிருத்தல்
3. R.B.C., W.B.C, சிறுதட்டு என்னும் மூன்று கல வகைகளைக் கொண்டிருத்தல்.
4. நார்களை ஆக்கும் முன்னோடிப் புரதங்களைக் கொண்டிருத்தல்.
5. அங்கங்களிற்கு இடையில் உடற்றொழிலியல் இணைப்பைப் புரிதல்.

- பூச்சிகளின் குருதியில் நிறப்பொருட்கள் எதுவும் இருப்பதில்லை எனவே பூச்சிகளின் குருதி நிறமற்றது.
- Crustacean, mollusca போன்றவற்றில் நீலநிறமான குருதி நிறப்பொருள் Haemocyanin காணப்படுகிறது.
- மண்புழுவின் குருதிமுதலுருவிலே கரைந்த Fe கொண்ட சிவப்பு நிறமான Hemoglobin என்னும் செந்நிறப்பொருள் காணப்படுகின்றது.
- Vertebrates இல் R.B.C. இல் Haemoglobin என்னும் நிறப்பொருள் காணப்படும்.
- மனிதவுடலில் 7% - 8% குருதி உண்டு சராசரி மனிதன் ஒருவரில் 5 – 6 இலீ குருதி உண்டு (70 Kg திணிவுடைய மனிதனில்)
- குருதியின் PH = 7.4 ஆகும் எனவே குருதி மென்காரத் தன்மையுடையது
- மனிதக் குருதியின் கரைய அழுத்தம் 25 mmHg OR 3.3kPa

குருதி →
- குருதிமுதலுரு (blood plasma) 55%
- கலங்கள் (Cells) – 45%

குருதி முதலுரு **Blood Plasma** →
- Protein – 7%
- Water – 91.5% (90 – 92%)
- ஏனைய பதார்த்தங்கள் - 1.5%

புரதங்கள் **Proteins** →
- Albumin – 53%
- Globulin – 35%
- Fibrinogen - 12%

குருதியின் தாயம் (குருதி முதலுரு) கலங்களால் சுரக்கப்படுவதில்லை

❖ குருதிமுதலுரு (Blood Plasma) மென்மஞ்சள் நிறமான பாகுத்தன்மையுள்ள திரவம் இது பெருமளவு நீரையும் முதலுருப்புரதங்களையும் பலவகையான கரையங்களையும் கொண்டுள்ளது.

❖ குருதி முதலுருவில் ஒருசக்கரைட்டுக்கள், கொழுப்பமிலம், glycerol, amino acids, vitamins போன்ற போசனைப் பதார்த்தங்கள் Uria ,Uricacid, creatin போன்ற நைதரசன் கொண்ட கழிவுப் பொருட்கள் மற்றும் ஓமோன்கள் நொதியம் வாயுக்கள் என்பன காணப்படுகின்றன. இவற்றைத் தவிர $Na^+$, $K^+$, $Ca^{2+}$, $Mg^+$, $Cl^-$, $HCO_3^{2-}$, $HPO_4^{2-}$, $SO_4^{2-}$ ஆகியன உண்டு

நீர்

- உயர் அளவில் உள்ளது.
- கரைந்த நிலையில் பதார்த்தங்களைக் கொண்டு செல்வதில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது.
- இழையப்பாய் பொருள், நிணநீர் ஆக்கத்திலும் முக்கிய பங்கு வகிக்கும்
- குருதியின் கனவளவையும் குருதி அமுக்கத்தையும் பேணுவதில் முக்கிய பங்கு வகிக்கும்.

முதலுருப் புரதங்கள் **(Plasma proteins)**

1. **Albumin:** அதிகளவில் காணப்படும் (37-50g/l) மனிதனின் ஈரலில் தொகுக்கப்படும் குருதி முதலுருவில் இது கூழ் நிலையில் காணப்படும் இது குருதியின்,
   1. பிரசாரண அமுக்கத்தைச் சீராக்குவதில் முக்கிய பங்குவகிக்கும்
   2. குருதியின் பாகுத்தன்மை ஏற்படுத்துதல்.
   3. குருதி அமுக்கத்தைப் பேணுகின்றது.
   4. $Ca^{2+}$ - கொண்டு செல்கின்றது.

2. **Globulin:** Albumin க்கு அடுத்து கூடுதலாகக் காணப்படும்.இதில்,
   - α – globulin,
   - β - globulin,
   - γ – globulin என்னும் மூன்றுவகை காணப்படும்

α – globulin, β- globulin - ஈரலில் தொகுக்கப்படும்
γ – globulin - நிணநீர் இழையங்களில் தொகுக்கப்படும்.

❖ **α Globulin :** Thyroxin hormone ஐயும் பித்த நிறப்பொருளையும் இணைத்துக் கடத்துகின்றது.

❖ **β- Globulin :** Colesterol ஐயும் Vitaminகளான - A, D,E,K ஆகியவற்றை இணைத்துக் கடத்துகின்றது.

❖ **γ – Globulin :** பிறபொருளெதிரி Antibody அத்துடன் Histamin ஐ இணைத்துக் கடத்துகின்றது.

3 **Fibrinogen:** ஈரலில் உற்பத்தி செய்யப்படும் குருதியின் 2-4 g/l என்னும் செறிவில் காணப்படும் அத்துடன் நார்களை ஆக்குவதன் மூலம் குருதி உறைதலில் பங்கேற்கும்.

போசணைப் பொருட்கள்.

1. Glucose 2. Aminoacids 3. Fablyacid ,glycerol

❖மனிதனின் குருதியிலே glucose செறிவு 80 – 100 **mg/ 100ml**

❖ குருதியிலே குளுக்கோசின் செறிவை ஒழுங்காக்கும் ஓமோன் சதையியின் இலங்ககான் சிறுதீவுக்கூட்டங்களால் சுரக்கப்படுகின்ற இன்சுலின் , குளுக்ககோன் ஆகும்.

கழிவுப் பொருள்: Uria, Uric aid

❖ மனிதனின் Uria தொகுப்பு நடாத்தப்படும் பிரதான இடம் ஈரல் ஆகும் Uria கழிக்கப்படுவது பிரதானமாக சிறுநிரகத்தி மூலமாக ஆகும்.

(தொடரும்)


# இந்தியாவின் ஒத்துழைப்புடன் இலங்கையில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய அணு உலை

## விஞ்ஞான தொழில்நுட்பத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான அணு உலை ஒன்றை இலங்கையில் நிர்ணயிப்பது பற்றி இந்தியத் தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாக விஞ்ஞான தொழில்நுட்பத்துறை அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

வியன்னாவில் நடைபெற்ற சர்வதேச அணு சக்தி அதிகார சபையின் வருடாந்த மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றிருந்த போது இலங்கையில் அணு உலை ஒன்றை அமைப்பது பற்றி இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்ததாகவும் வேருவல மற்றும் நீர்கொழும்பு கரையோரப் பகுதிகளில் காணப்படும் தோரியத்தைக் கொண்டு அணு உலையின் மூலம் மின் சக்தியை தயாரிக்க முடியும் என அமைச்சர்



கூறினார்.

தோரியத்தை செறிவாக்கி மின் சக்தியைத் தரும் வளமாக மாற்றும் தொழில் நுட்பத்தை இந்தியா அபிவிருத்தி செய்துள்ளது. அது இலங்கைக்கு உதவிகளை வழங்கும் என திஸ்ஸ விதாரண குறிப்பிட்டார்.

இந்தியாவில் தோரியத்தை மின் உற்பத்தி செய்யும் வளமாக பயன்படுத்தும் உலைகள் பல இந்தியாவில் செயற்பட்டு வருகின்றன. இதேபோன்று இலங்கையிலும் தோரியத்தை பயன்படுத்தி மின் சக்தியை உருவாக்குவதற்கான உதவிகளை இந்திய விஞ்ஞானிகளிடமிருந்து பெறுவது தொடர்பாக இலங்கை பிரதிநிதிகள் குழு இந்திய அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

அணு சக்தி நிபுணர்கள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு அணு உலையை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வார்கள் என விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் திஸ்ஸ விதாரண கூறியுள்ளார். (அ-6)

# போசாக்குத் திட்டங்கள் தோல்வி கண்டுள்ளன சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட போசாக்குத்திட்டங்கள் தோல்வி கண்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்த நிலைமைக்கான காரணிகள் இது வரை கண்டுபிடிக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2008ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டுவரையில் விசேட போசாக்குத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் குறை போசாக்குடைய குழந்தைகள் அதிகமாக காணப்படுவதாக சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறை போசாக்கு நிலை காரணமாக தாய் சேய் மரண வீதமும் உயர்வடைந் துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# சட்டமா அதிபர் சி.ஆர்.டி.சில்வா இந்த வாரத்தில் இருந்து ஓய்வு

(கொழும்பு)

இவ்வாரத்தில் தமது பதவியிலிருந்து விலகப்போகும் சட்டமா அதிபர் சி.ஆர்.டி சில்வா எதிர்காலத்தில் எந்தவொரு அரச பணிகளையும் ஏற்கப்போவதில்லை என தெரிவித்துள்ளார். பிரதம நீதியரசர் சரத் என் சில்வா அடுத்த வருடத்தில் தமதுபதவியிலிருந்து விலகிய பின்னர் அந்தப்பதவிக்கு சி.ஆர்.டி.சில்வா நியமிக்கப்படவுள்ளதாக வெளியான தகவல் தொடர்பிலேயே சி.ஆர்.டி.சில்வா தமது கருத்தை வெளியிட் டுள்ளார்.

தாம் மீண்டும் சட்டத்தரணியாகவே செயற்பட விரும்புவதாக சில்வா குறிப் பிட்டுள்ளார். அரசாங்கத்துறையிலிருந்து ஓய்வு பெறுவோரை கட்டாயமாக பணிகளை தொடரச் செய்யும் வகையில் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ கடந்த ஓகஸ்ட்மாதத்தில் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார்.

எனினும் இதனை ஆட்சேபித்து தாக்கல்செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்ய உயர் நீதிமன்றம் ஜனாதிபதிக்கு அவ்வாறான அதிகாரம் இல்லை என்றும் அந்த அதிகாரம் நாடாளுமன்றத்திற்கே உள்ளதாகவும் தெரிவித்தது. அதனையடுத்து சி.ஆர்.டி.சில்வாவின் சட்டமா அதிபர் பணியை நீடிக்கும் திட்டம் குழம்பிப்போனது. இதனையடுத்து தமது வர்த்தமானி அறிவித்தலை விலக்கிக்கொள்வது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இந்நிலையில் சி.ஆர்.டி.சில்வா எதிர்வரும் 9ஆம் திகதி பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் அந்தப் பதவியை நிரப்புவதில் தாமதம் ஏற்படும் எனக் கருதப்படுகிறது. எனவே 9ஆம் திகதியன்று ஜனாதிபதி பதில் சட்டமா அதிபரை நியமிப்பார் என சட்டத்துறைத் தரப்புகள் எதிர்பார்க்கின்றன. (அ-5)

# கட்டுரைப் போட்டிக்கான முடிவுத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பால் (CHA) ''மனிதாபிமானத்திற்கான தகவல் பரிமாற்றம்'' எனும் தலைப்பில் நடாத்தப்படவுள்ள கட்டுரைப் போட்டியின் முடிவுத்திகதி இம்மாதம் 26 ஆம்திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இது 5.10.2008 என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இ

# பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாத சகலருக்கும் டிசம்பர் 31க்கு முன் பத்திரம் விநியோகம்

## பதிவாளர் நாயகம் இ.எம்.குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

பிறப்புஅத்தாட்சிப் பத்திரம் இல்லாத சகலருக்கும் டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அதனை விநியோகிக்கும் விசேட செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி உள்ளதாக பதிவாளர் நாயகம் இ.எம்.குணசேகர தெரிவித்தார்.

பிறப்பத்தாட்சிப் பத்திரம் இல்லாததன் காரணமாக மக்கள் எதிர்நோக்கியுள்ள அசௌகரியங்களுக்கு தீர்வு காணும் நோக்கிலேயே இந்த செயற்றிட்டம் மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டார். இதற்கமைய பிறப்பத்தாட்சிப் பத்திரம் இல்லாத சகலருக்கும். டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அதனை பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு நாட்டிலுள்ள சகல மேலதிக மாவட்ட பதிவாளர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளதாக அவர் கூறினார்.

இந்த செயற்றிட்டம் தொடர்பான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 20 அம் திகதி நடைபெறவுள்ளதாகவும் இதில் சகல மேலதிக மாவட்ட பதிவாளர்களும் கலந்து கொள்ளவுள்ளதாகவும் பதிவாளர் நாயகம் தெரிவித்தார். பிறப்புத்தாட்சிப்பத்திரம் பெறத்தவறிய மற்றும் தொலைத்தவர்களுக்கு பிறப்பத்தாட்சிப் பத்திரங்களை விநியோகிக்கவும் உரிய ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு மதிப்பிடப்பட்ட வயது சான்றிதழ்களை விநியோகிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் அதனை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்குமென பதிவாளர் நாயகம் இ.எம்.குணசேகர சுட்டிக்காட்டினார். (அ)

# எரிபொருள் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்காத அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை குறைந்துள்ள நிலையில் உள்ளூரில் எரிபொருட்களின் விலைகள் குறைப்பதற்கு நடவடிக்கைஎடுக்காமையால் அமைச்சர்கள் இருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலேயே இரண்டு அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. நிதியமைச்சர் மற்றும் பெற்றோலியத்துறை அமைச்சர் ஆகியோருக்கு எதிராகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சி இதர எதிர்க்கட்சிகளுடன் ஆரம்பக்கட்ட பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது.

அமைச்சர்கள் இருவருக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆளுங்கட்சியைசேர்ந்த சில உறுப்பினர்களின் ஆதரவைபெற்றுக்கொள்வது தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. எரிபொருட்களின் விலைகளை குறைக்காமைக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி அண்மையில் வழக்கொன்றைதாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

# சவுதியில் மரணதண்டனை விதிக்கப்பட்ட பாத்திமா ரிசானா விடுதலையாகும் சாத்தியம்

சவுதியில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கைப் பணிப்பெண் பாத்திமா ரிசானாவிற்கு விடுதலை பெறுவதற்கான சாத்தியம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவில் உள்ள மனித உரிமைகள் குழுவினால் இலங்கைத் தூதரகத்திற்கு இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

ரிசானாவின் பராமரிப்பில் இருந்த குழந்தையை இவர் கொலை செய்ததாக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொலையுண்ட குழந்தையின் தந்தை அவருக்கு மன்னிப்பு வழங்க தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந் நாட்டு சட்டத்திற்கு அமைய மனுதாரர்களின் விருப்பத்தின் அடிப்படையில் குற்றவாளியை விடுதலை செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# இலங்கை சிங்கள மக்களின் நாடு என இராணுவத் தளபதி மீண்டும் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை சிங்கள மக்களின் நாடு எனவும் சிறுபான்மை மக்கள் தேவையற்ற விதத்தில் உரிமைகளைக் கோரக் கூடாது எனவும் இராணுவத் தளபதி மீண்டுமொரு முறை வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் வார இறுதி ஊடக மொன்றுக்கு அளித்த செவ்வியின் போது அவர் இதனைக்குறிப்பிட்டுள்ளார்.

சீனாவை சீனர்களும், பிரித்தானியாவை ஆங்கிலேயரும் ஜெர்மனியை ஜெர் மனியர்களுமே ஆண்டுவந்ததாகவும் பெரும்பான்மை மக்களே நாடுகளில் ஆட்சி அதிகாரத்தைச் செலுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வரலாற்றுக் காலம் முதலே சிங்கள மக்களினால் ஆட்சி நடத்தப்பட்டு வந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனேடியப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியின் போது தெரிவித்த கருத்துக்கள் திரிவுபடுத்தப்பட்டு அரசியல் மயப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டதாக இராணுவத்தளபதி தெரிவித்துள்ளார்.

எனினுழ் குறித்த ஊடகத்துடனான செவ்வியின் போதும் பெரும்பான்மை ஆதிக்கத்தை வெளிப்படுத்தும் வகையிலான கருத்துக் களை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிங்களவர்களுக்கு இந்த நாடு சொந்தமில்லை என சிறுபான்மையினர் குறிப்பிடும் போது சிங்களப் பெரும்பான்மை மக்களும் பாதிக்கப்படுவர் என்பதனைப்பற்றி எவரும் கவலைப்படுவதில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

அநாவசியமான உரிமைகளை எந்தவொரு சிறுபான்மையினரும் கோரி நிற்கக் கூடாதென அவர் தெரிவித்துள்ளார். இதனை அரசியல் ரீதியான கூற்றாகக் கருதக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை என இராணுவத் தளபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# கல்வி, சுகாதாரம், கலாசாரம் தொடர்பில் தேசிய கொள்கையை உருவாக்க ஜே.வி.பி. நடவடிக்கை

(கொழும்பு)

கல்வி சுகாதாரம் மற்றும் கலாசாரம் ஆகிய விடயங்களுக்காக தனித்தனியான தேசிய கொள்கைகளை உருவாக்குவதற்கு ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது. ஜே.வி.பி. பாராளுமன்றஉறுப்பினர்கள்உள்ளிட்டஏழுபேர்கொண்ட குழுவும் இதற்கென நியமிக்கப் பட்டுள்ளது.

தேசிய கொள்கையொன்று இன்மையினால் கல்வி சுகாதாரம் மற்றும் கலாசாரம் போன்ற துறைகள் சீர்குலைந்துள்ளன. இந்த துறைகளை கட்டியெழுப்பும் நோக்கிலேயே தேசிய கொள்கையை வகுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜே.வி. பி தெரிவித்துள்ளது. தேசிய கொள்கையை வகுப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வரும் அடங்குகின்றனர். கொள்கைகளை வகுக்கின்றபோது அதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்காக பல்கலைக் கழக பேராசிரியர்கள், பேராளர்களின் ஆலோசனைகளை பெற்றக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன. (அ-6)

செய்யவேண்டியதைச் செய்ய முயலுங்கள். முயன்றால் செய்யவேண்டியது இதுவென்பதில் சந்தேகம் ஏற்படாது.

~ ஆவ்ரி

வலம்புரி

## இலங்கையின் அவலத்தை நிறுத்த இந்தியத் தலையீடு உடன் தேவை

ஈழத்தமிழரைக் காப்பாற்றுமாறு கலைஞர் கருணாநிதி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த வேண்டுகோளுடன் ஈழத்தமிழரை காப்பாற்றுமாறு கோரிக்கை விடுத்து பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தமிழக மக்கள் இலட்சக்கணக்கான தந்திகளையும் அனுப்பி வைத்துள்ளனர்.

இலங்கை அரசு யுத்தம் நடத்துவதற்கு முன்னதாக இனப்பிரச்சினைக்கு காத்திரமான தீர்வை முன்வைத்திருக்கவேண்டும்.

மகிந்த அரசுக்கு முற்பட்ட அரசுகள் பல தடவைகள் தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளன.

இப்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற சூளுரைப்போடு வன்னியில் போர் நடத்துகின்றார்.

இந்தப் போர் நடவடிக்கையால் பலர் உயிரிழந்து போயுள்ளனர். உயிரிழந்தவர்களில் இராணுவத்தைச் சேர்ந்த சிங்கள இளைஞர்களும் அடங்குவர்.

இராணுவத்தில் சேர்ந்த அத்தனை சிங்கள இளைஞர்களும் மண்ணைக் காப்பாற்றுதல் என்ற கோஷத்தை உடையவர்கள் அல்ல.

அவர்களில் பலர் ஏழை சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், ஏழ்மையின் காரணமாக படையில் சேரவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகினர். இதனை தப்பியோடிய படையினரின் உயர்ந்த எண்ணிக்கை உறுதி செய்கின்றது.

ஆக, இனப்பிரச்சினை, தமிழர்கள் இரண்டாம் தரப் பிர்ஜைகளாக நடத்தும் முறைமை இவை பற்றி எதுவுமே தெரியாத பலர் படையில் உள்ளனர்.

இந்த ஏழை இளைஞர்கள் மூலம் போரை முன்னெடுத்து அவர்களை களப்பலியாக்கி, அங்கவீனமாக்கி விட்டு தமது ஆட்சியே இலங்கை மண்ணைக் காப்பாற்றுகின்றது என வீறாப்பு பேசுவது அரசுக்கு அழகல்ல.

அரசென்பது மக்களின் வாழ்வுரிமையைக் காப்பாற்றும் பொறுப்பைச் செய்தாகவேண்டும். ஒட்டுமொத்தத்தில் இலங்கை அரசு சிங்கள - தமிழ் மக்களின் வாழ்வுரிமைக்கு அனர்த்தம் விளைவித்துள்ளது.

வடக்கிலும், தெற்கிலும் கண்ணீரையும்-அவலக்குரலையும் சன்மானமாக்கியுள்ளது. இந்நிலையில் இந்திய அரசு இவற்றை உள்நாட்டு விவகாரம் எனக் கருதிப் பார்த்திருத்தல் பொருத்தமற்றது.

எனவே ஈழத்தமிழருக்காக மட்டுமன்றி இலங்கை முழுவதிலும் ஏற்பட்டுள்ள உயிரழிவை தடுத்து நிறுத்த இந்தியா முன்வரவேண்டும்.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் முதல்வர் கருணாநிதியின் கோரிக்கையுடன் இலங்கை விவகாரத்தில் தலையிடவேண்டும். இந்தியாவின் தலையீடு இன்னுமோர் யுத்தம் இலங்கையில் ஏற்படாதவாறு வகை செய்தல் அவசியம்.

அதாவது நிலைத்து நீடிக்கக் கூடிய உரிமையை தமிழ் மக்கள் பெறக் கூடியதான வழிவகைகளைச் செய்தாகவேண்டும்.

# விடுதலைப் புலிகளுக்கு பின்னடைவு; ஆனால் மோதல்கள் முடிவுக்கு வராது

## இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

வடபகுதியில் நடைபெற்றுவரும் மோதல்களில் விடுதலைப் புலிகளுக்கு பின்னடைவு ஏற்பட்டாலும் இலங்கையில் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இடம் பெற்றுவரும் மோதல்கள் முடிவுக்கு வராதென இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ள னர்.

விடுதலைப் புலிகள் அரசியல் தலைநகரான கிளிநொச்சி மீது அரசாங்கப்படைகள் தாக்குதல்களை நடத்தியிருப்பதானது கடந்த 13வருடங்களில் விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்ட பாரிய பின்னடைவு எனவும், 1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் விடுதலைப்புலிகள் பின்னடைவைச் சந்தித்துவருவதாகவும் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

விடுதலைப்புலிகளின் முக்கிய ஆயுதமான தற்கொலைக் குண்டுத்தரக்குதல்அவர்களுக்கு பலமாக இருப்பதாகவும், அந்தப் பலம் இன்னமும் அழிக்கப்படாததால் ,முன்னேறிச் செல்லும் இராணுவத்தினர் மீது அவர்கள் தற்கொலை குண்டுத் தாக்குதல்களை நடத்துவதற்காக வாய்ப்புக்கள் இருப்பதாகவும் இராணுவ ஆய்வாளர்களை மேற்கோள் காட்டி ஏ. எவ். பிசெய்தி வெளியிட்டுள்ளது.

சிறு சிறு குழுக்களாக இராணுவத்தினர் பிரிந்து முன்னேற்ற நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதே அண்மை இராணுவ நடவடிக்கை வெற்றியடையக் காரணமாக இருந்தது என இளைப்பாறிய பிரிகேடியர் ஜெனரல் விபுல் பொட்டஜ் தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் கிளிநொச்சியைக் கைப் பற்ற முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அவர்களின் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களால் தோல்வியைக் கண்டிருந்ததாக அவர் ஏ.எவ்.பி செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

### விடுதலைப்புலிகளை ஒழிக்க அரசியல் திட்டம் அவசியம்

விடுதலைப்புலிகளை முற்றாக ஒழிக்க வேண்டுமாயின் தமிழர்களுக்கு வழங்கக்கூடிய அரசியல் திட்டமொன்று கையில் இருக்க வேண்டும்என பொட்டஜ்கூறினார்.

இதேவேளை, தவிடுதலைப்புலிகள்இன்னமும் தமது தற்கொலைத் குண்டுதாரிகளை முன்னேறும் இராணுவத்தினருக்கு எதிராக பயன்படுத்த வில்லையென பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ ஆய்வாளர் ஒருவர் தம்மிடம் தெரிவித்ததாக ஏ. எவ்.பி குறிப்பிட்டுள்ளது.

1995ஆம் ஆண்டில் இருந்து விடுதலைப்புலிகள் பாரிய பின்னடைவுகளை சந்தித்து வருகின்றனர். எனினும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தும் அவர்களின் திறனை நாம் புறக்கணித்துவிட முடியாது. அதனால் மோதல்கள் முடிந்துவிட்டது என்ற முடிவுக்கு நாங்கள் வர முடியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதே நேரம் அடுத்தவருடம் பாதுக்காப்புக்கான செலவீனத்தை இலங்கை அரசாங்கம் 177மில்லியன் ரூபாவாக உயர்த்தி இருப்பதாகவும் அந்த இராணுவ ஆய்வாளர் தெரிவித்துள்ளார். (அ-6)

# வீசா இரத்துச் செய்யப்பட்ட சோஆ அதிகாரி சியாவனி பியுஇரோ நாடு திரும்பினார்

(கொழும்பு)

அரசாங்கத்தின் உத்தரவுக்கமைய சோஆ சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தின் கிளிநொச்சிக்கிளையின் திட்டமிடல் முகாமையாளர் கியாவனி பியுஇரோ இலங்கையை விட்டு வெளியேறியுள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்புடன் இணைந்து விட்டதாகவும் அதனால் வன்னியிலிருந்து வெளியேற விரும்பவில்லை எனவும் முன்னர் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

எனினும் கடந்த மாதம் 26ஆம் திகதி வவுனியா ஊடாக அவர் கொழும்பை வந்தடைந்தார்.

அவரின் விசாவை இலங்கை பாதுகாப்பு அமைச்சு இரத்துச் செய்ததுடன் இம் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் நாட்டைவிட்டு வெளியேறி விட வேண்டும் எனவும் அறிவித்திருந்தது. இதற்கமைய இத்தாலி நாட்டவரான அவர் விமானம் மூலம் நாடு திரும்பியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமான சோ ஆ அமைப்பின் கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் அங்கு செயற்பட்ட ஐ.நா. ஸ்தாபனங்கள் பலவற்றுடன் இணைந்து செயற்பட்டபோதும் அவர் மனிதாபிமான பணிகளை முன்னெடுக்கும் விடயத்தில் முறையற்ற விதத்தில் செயற்பட்டிருந்த தாக அரச சார்பற்ற நிறுவனத்தகவல்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் நாடு திரும்பும் பியுஇரோவை ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்க அனுமதிக்கவில்லை என சோ ஆ அமைப்பின் இலங்கைக்கான தலைவர் பிரானார்ட் ஜஸ்பெர்ஸ் வெய்ஜர் அந்தஊடகத்திடம் கூறினார். எனினும் அரசாங்கத்தின் உத்தரவை மீறத் தாம் விரும்பவில்லை எனவும் தெரிவித்தார்.

நாம் அரசாங்கத்தின் அழைப்பை ஏற்றே இங்கு வந்துள்ளோம் எனவே அதற்கு கட்டுப்பட்டுச் செயற்படவே நாம் விரும்புகிறோம் என அவர் கூறினார்.

அத்துடன் இரத்துச்செய்யப்பட்ட பியுஇரோவின் வீசாவை மீளப் புதிப்பிக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்,

எனினும் பாதுகாப்பு அமைச்சு தனது முடிவை மாற்ற மறுத்துவிட்டதாக மனித உரிமைகள் அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-6)

# மூவருக்கு மருத்துவ நோபல் பரிசு

(ஸ்டாக்ஹோம்)

2008ஆம் ஆண்டுக்கான மருத்துவ நோபல் பரிசு ஜேர்மனியைச் சேர்ந்த ஹாரல்டு ஹீசேன், பிரான்சைச் சேர்ந்த சினோசி மற்றும் மாண்டகேனீர் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஸ்வீடனைச் சேர்ந்த ஆல்பிரட் நோபலால் நிறுவப்பட்ட நோபல் பரிசு ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

மருத்துவம், இலக்கியம் உள்ளிட்ட 6 துறைகளில் இந்தவிருதுகள் வழங்கப்படுகின்றன.

மருத்துவ நோபல் பரிசு முதலில் அறிவிக்கப்படுவது வழக்கம்.

இந்த ஆண்டு மருத்துவத்திற்கான நோபல் பரிசை ஜேர்மனியைச்சேர்ந்த ஹறால்டுஹீசேன் மற்றும் பிரான்சைச் சேர்ந்த பாரி சினோசி மற்றும் லூக் மாண்டகேனீர் ஆகியோர் பெறுகின்றனர்.

எச்ஐவி வைரசை கண்டு பிடித்ததற்காக பிரான்ஸ் விஞ்ஞானிகளுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

பெண்கள் மத்தியில் அதிகமாக காணப்படும் புற்றுநோய்க்கான காரணத்தை கண்டறிந்ததற்காக ஜேர்மன் விஞ்ஞானி இந்த விருதை பெற தேர்வு செய்யப்பட்டுள்ளார். (சு-5)


# ரயில் சேவை வழமைக்கு

(கொழும்பு)

சாரதிகளும் பாதுகாவலர்களும் இணைந்து மேற்கொண்டிருந்த பணிப் பகிஷ்கரிப்பு நேற்றுப் பிற்பகலுடன் நிறைவுக்கு வந்தது. போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து பணிப் பகிஷ்கரிப்பை முடிபுக்கு கொண்டுவர தீர்மானித்ததாக ரயில் பாதுகாவலர் சங்கத்தின் தலைவர் டி.ஜி.ஜே.வெலிகல தெரிவித்தார். எவ்வாறாயினும் பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக ரயில் சேவைகள் நேற்றைய தினமும் பாதிக்கப்பட்டதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவிக்கின்றது. நேற்று நடைபெறவிருந்த 300 ரயில் சேவைகளில் 50 ரயில் சேவைகள் மாத்திரமே இடம்பெற்றதாக அந்த நிலையம் சுட்டிக் காட்டியது. (சு-3)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## நம் நடத்தையை மாற்றுவது எப்படி?



நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும் , நம் உடம்பின் ஒவ்வோர் அசைவும், நாம் எண்ணுகின்ற ஒவ்வோர் எண்ணமும் சித்தத்தில் ஒரு பதிவை விட்டுச் செல்கிறது. இந்தப்பதிவுகள் மேற்பரப்பில் தென்படா திருக்கலாம். ஆனாலும் ஆழ்மனத்தில் நாம் அறியாமலே செயல் புரியும் அளவு வலிமை படைத்தவை அவை. ஒவ்வொரு கணமும் நாம் என்னவாக இருக்கிறோம் என்பதை மனத்திலுள்ள இந்தப் பதிவுகளின் மொத்தமே உருவாக்குகிறது. இப்போது இந்தக் கணத்தில் நான் என்னவாக இருக்கிறேனோ அது என்னுடைய கடந்த கால சம்ஸ் காரங்களுடைய மொத்தத்தின் விளைவாகும்.

இதுதான் உண்மையில்குணம் என்று அழைக்கப்படுகிறது. ஒரு மனிதனுடைய குணத்தை இந்த சம்ஸ்காரங்களில் மொத்தமே நிர்ணயிக்கின்றது. நல்ல சம்ஸ்காரங்கள் மேலோங்கியிருந்தால் குணம் நல்லதாக அமைகிறது. தீயவை மேலோங்கியிருந்தால் குணம் தீயதாக அமைகிறது. ஒரு மனிதன் தொடர்ந்து தீய வார்த்தைகளைக் கேட்டு தீய எண்ணங்களையே எண்ணி ,தீய செயல்களையே செய்து கொண்டிருந்தால் அவனது மனம் தீய சம்ஸ்காரங்களால் நிறைகிறது. அவை அவனது சிந்தனையையும் செயலையும் அவன் அறியாமலே ஆட்டிப்படைக்கின்றன.

# முதுமையில் கை, கால்கள் நடுங்குவதேன்...?

முதுமையில் கை,கால் மற்றும் உடல் நடுக்கம் ஏன் வருகிறது? சற்று விவரமாக நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள்.

***கை,கால்கள் நடுக்கம் என்பது முதுமையில் மட்டும் வரக்கூடிய தொல்லையா?***

இத்தொல்லை எந்த வயதிலும் வரலாம். ஆனால் 60 வயதைத் தாண்டியவர்கள்தான் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்கின்றனர் டாக்டர்கள்.

வயதானவர்கள் சிலருக்கு கை,கால்கள் மட்டும் உதறுகிறது. ஒரு சிலருக்கு தலை மட்டும் உதறுகிறது. உடல் முழுவதும் ஒரு சிலருக்கு நடுங்குவதையும் காணமுடிகிறது. இவைகள் எல்லாம் எதனால் ஏற்படுகிறது? முதுமையின் விளைவா? அல்லது நோய்களின் அறிகுறியா?

வயதான காலத்தில் கை, கால்களில் நடுக்கம் ஏற்பட்டால் அது முதுமையின் விளைவே என்று எண்ணி டாக்டரிடம் செல்வது இல்லை. சில சமயங்களில் டாக்டர்கள் கூட இத்தொல்லைக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பது இல்லை. கை, கால்கள் நடுக்கத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

*1.சாதாரண நடுக்கம் - இதுமுதுமையின் விளைவே.*

*2.பல நோய்களினாலும் மருந்துகளினாலும் கை,கால்கள் நடுக்கம் ஏற்படுதல்.*

உதாரணம்:-

- மது அதிமாக அருந்துவது
- மதுவை திடீர் என்று நிறுத்துவது
- ஆஸ்துமா மற்றும் மனநோய்க்கு கொடுக்கும் மருந்துகள்
- தைராய்ட் சுரப்பி அதிமாகச் சுரத்தல்
- சிறுநீரகம் மற்றும் கல்லீரல் செயலிழத்தல்
- நரம்பு சார்ந்த நோய்கள் - உதறுவாதம்

முதுமையில் எந்த நோயுமின்றியும் கை, கால்களில் சற்று நடுக்கம் ஏற்படலாம்.

எந்தவிதக் காரணமுமில்லாமல் கைகளில் லேசாக நடுக்கம் ஏற்படலாம். இதனால் அவர்களுடைய அன்றாட வேலைகளில் எந்த வித பாதிப்பும் ஏற்படாது.

ஆனால் 60வயதைத் தாண்டியவர்களுக்கு எழுதும் பொழுதோ கைகளில் நடுக்கம் அதிகம் ஏற்படும். முக்கியமாக மற்றவர்கள் முன்னிலையில் இது இன்னமும் அதிகரிக்கும். இதைச் சில சமயங்களில் மனப்பதற்றத்தினால் வருவதாகக் கூட நினைத்துக் கொள்வார்கள். ஆனால் இது தவறு. கைகளில் நடுக்கம் அதிகம் உள்ளவர்கள் வெளியே சென்று மற்றவர்களிடம் பழகத் தயங்குவார்கள்.



இந்தத் தொல்லைகளுக்கும் பார்க்கின்சன்ஸ் நோயினால் வரும் நடுக்கத்திற்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரிந்துகொள்ளுவது மிக அவசியம்.

***முதுமையினால் மட்டும் ஏற்படும் நடுக்கத்திற்கு சிகிச்சை முறை உண்டா?***

இந் நடுக்கத்தினால் வரும் பல நோயாளிகள் தங்களுக்கு பார்க்கின்சன்ஸ் நோய் இருப்பதாக பயந்து தான் டாக்டர்களிடம் செல்லுகிறார்கள்.அவர்களை முழுமையாகப் பரிசோதனை செய்து இந் நடுக்கம் பார்க்கின்சன்ஸ் நோயினால் இல்லை என்று வலியுறுத்தவேண்டும். இதற்கு மாத்திரைகளின் மூலம் நடுக்கத்தை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்கமுடியும். ஆனால் ஆஸ்துமா, இருதய பலவீனம் மற்றும் நீரிழிவு நோயுள்ளவர்கள். இம்மருந்தை உட்கொள்ளக் கூடாது. ஆகையால் இந்நோயுள்ளவர்கள் மருத்துவரைக் கலந்து ஆலோசித்து தக்க சிகிச்சை பெறுவது நல்லது. நரம்பை இயக்கும் திரவம் குறைந்த பின்பே இந்நோய் முதியோருக்கு வருகிறது.

சுமார் 80% அளவுக்கு திரவம் குறைந்த பின்பே இந்நோயின் அறிகுறி தோன்றும் . நோயின் முதல் அறிகுறியே கையில் ஏற்படும் நடுக்கம். ஆரம்பத்தில் கையில் ஒரு மாத்திரையை வைத்து உருட்டிக்கொண்டு இருப்பதுபோல் செய்துகொண்டிருப்பார்கள்.

இந்த நடுக்கம் ஏதாவது ஒரு வேலை செய்யும்பொழுதும், தூங்கும் பொழுதும் இருக்காது. இது நாக்கைப் பாதிக்கும் பொழுது பேச்சுமாறுபடும். அதாவது குறைந்த தொனியில் முணுமுணுத்துக்கொண்டு இருப்பது போல் பேசுவார்கள்.அடுத்த முக்கியமான பிரச்சினை உடலிலுள்ள தசைகள் எல்லாம் இறுகி மரக்கட்டை போல் ஆகிவிடும். இத னால் ஓரிடத்தில் உட்கார்ந்தால் எந்தவித அசைவுமின்றி மணிக்கணக்கில் அப்படியே உட்கார்ந்துகொண்டே இருப்பார்கள். நிற்க வைத்தாலும் அதே நிலைதான். இதனால் நடையும் பாதிக்கப்படும். இவர்கள் வாயில் எச்சில் ஊறிக்கொண்டு இருக்கும்.

முதுகெலும்பு குனிந்த நிலையிலேயே இருக்கும்.இவர்களுக்கு மனப்பதற்றம், மனச் சோர்வு அதிகம் இருக்கும்.சிலருக்கு அறிவுத் திறன் வீழ்ச்சியும் சேர்ந்திருக்கும். இந் நோய் மெதுவாக அதிகரித்துக்கொண்டு 10-15 வருடங்களில் அவரை படுக்கையில் கிடத்திவிடும்.

***இக்கொடிய நோயை எப்படி கண்டு பிடிப்பது? இதற்கு தக்க சிகிச்சை உண்டா?***

இந்நோயை டாக்டரினால் எளிதில் கண்டு கொள்ளமுடியும். இதை முழுமையாகக் குணப்படுத்த முடியாது. ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால் மருந்துகள் மூலம் மேலும் பரவாமல் கட்டுப்படுத்த முடியும்.

இந்நோய்க்கு பல மருந்துகள் உண்டு. ஆனால்,அம் மருந்தின் பக்கவிளைவுகள் சில சமயங்களில் நோயை விட அதிகமாக இருக்கும்.ஆகையால் இதற்கான மருந்துகளை மிக கவனத்துடன் கொடுக்கவேண்டும். நோயுடன் சேர்ந்த மற்ற பிரச்சினைகளுக்கும் தக்க சிகிச்சை அளிக்க வேண்டும். உ+ம் -மனச்சோர்வு , மலச்சிக்கல்.

தசைகளின் இறுக்கத்தைக் குறைக்கவும் நடைப்பயிற்சி கொடுக்கவும், இயன்முறை சிகிச்சை மிகவும் அவசியம். மருந்து களின் மூலம் குணமடையாதவர்கள் மற்றும் மருந்துகளில் பக்கவிளைவுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூளையில் அறுவைச் சிகிச்சை செய்து பார்க்கலாம்.

முதுமையில் கை,கால்களில் நடுக்கம் ஏற்பட பல காரணங்கள் உண்டு.அவற்றில் முக்கியமாக பார்க்கின்சன்ஸ் நோய் உண்டா இல்லையா என்பதைப் பற்றி முதியவர்களுக்கு தெளிவாக எடுத்துரைப்பது ஒரு டாக்டரின் முக்கிய கடமையாகும். ஏனென்றால் மற்ற காரணங்களால் வரும் நடுக்கத்திற்கு எளிதில் சிகிச்சை அளிக்க முடியும்.அந்த நம்பிக்கை முதியவர்களுக்கு ஒரு டாக்டர் உண்டாக்குவது மிகவும் அவசியம்.




# ஒஸ்ரியோ பொரோஸிஸ் நோயில் இருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு பல்வேறு வாய்ப்புகள்

ஒஸ்ரியோ பொரோஸிஸ் என்பதன் நேரடியான அர்த்தம் "துளைகளையுடைய எலும்பு" என்பதாகும். பொதுவாக எலும்புகளில் ஏற்படும் வியாதிகளுக்கு இழையங்கள் குறைவாக இருப்பதே காரணமாக இருக்கிறது. எலும்புத் திறன் குறைவாக காணப்படுதல் (ஏற்படும்) எலும்பின் கட்டமைப்பில் இடைவெளிகள் தோன்றலாம். எலும்புகள் பலத்தை இழப்பது, எளிதில் நொறுங்கக் கூடிய நிலைக்கு இட்டுச் செல்வதால் உடைவதற்கான ஏது நிலைகள் தோன்றலாம்.

**ஒஸ்ரியோ பொரோஸிஸ் பிணியை தோற்றுவிக்கும் காரணிகள் யாவை?**

சிறு பராயத்திலும் இளமைப் பருவத்திலும் எலுவும்கள் வளர்ச்சியடைகின்றன. இதுபதுகளின் பிற்பகுதியில் அவை மிகவும் பலம் பொருந்தியவையாகிவிடுகின்றன. ஆனால் நடுத்தர வயதினராகும் போது எலும்புகள் பல முள்ளவையாக இருக்கும். அதேவேளை சிறிது சிறிதாக அவற்றின அடர்த்தி இழக்கப் படுகின்றது. இவ்வாறு நொய்மையடைதல் வயது செல்லச் செல்ல தொடர்ந்து நடைபெறும்.

பெண்களைப் பொறுத்தவரை இந் நிலையானது மாதவிடாய் நின்ற பின்னரான பத்து வருடங்களில் வேகம் பெறுகின்றது. அதாவது எலும்புகளை வலுப்பெறச் செய்யும் ஒஸ்ரோஜின் (Oestrogen) என்னும் ஹோர்மோன் சூலகங்களில் உற்பத்தியாவது குறைவடைவதுடன் இது நடைபெறும். ஆண்கள் , அவர்களின் எலும்புகள் இயல்பிலேயே அதிக வலுவுடையனவாகவும் அவர்கள் மாதவிடாய் இறுதியாதல் போன்றவற்றில் சம்பந்தப்படாத காரணங்களினால் ஒஸ்ரியோ பொரோஸிஸ் தாக்கத்தை குறைவாகவே கொண்டிருப்பர்.

**ஆபத்து ஏது நிலையிலுள்ளவர் யார்?**

முதுமையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் யாவரும் ஒஸ்ரியோ பொரோஸிஸ் ஏற்படக் கூடிய ஆபத்து நிலையில் உள்ளவர்களே. இதன் காரணமாகவே முதியவர்கள் கீழே வீழ்வதுடன் எலும்புகள் முறிவடைகின்றன. ஆயினும் சிலர் இவ்வகை ஆபத்துக்களை அதிகம் அடையக் கூடியவர்களாயுள்ளனர். பின்வருவன இவற்றிற்கு காரணிகளாயமையலாம்.

**ஒஸ்ரோஜின் குறைபாடு**

உரிய காலம் வருவதற்கு (45வயது) முன்னரே மாதவிடாய் இறுதி நிலையை அடைந்தவர்கள் அல்லது ஒன்று அல்லது இரண்டு சூலகங்களும் அகற்றப் பெற்றவர்கள் இக் குறைபாட்டிற்கு உள்ளாகும் ஆபத்தை கொண்டிருப்பர்.

**உடற்பயிற்சி இல்லாதோர்**

உடற்பயிற்சியானது அவர்களின் வளர்ச்சிக் காலத்திலும் குமர்ப் பருவத்திலும் எலும்புகளை வலுப்பெற்றவையாக வைத்திருக்கும். ஆகையினால் உடற் பயிற்சிலீடுபடாதவர்கள் அல்லது ஏதேனும் பிணிகள் காரணமாக அவ்வாறு செய்ய இயலாதவர்கள் எலும்புகளிலிருந்து கல்சியம் இழக்கப்படுவதால் ஒஸ்ரியோ் பொரோஸிஸ் பிணியினால் பீடிக்கப்படும் ஆபத்தையுடையவர்களாயிருப்பர்.

***ஒரே குடும்பத்தை சேர்ந்த பலர் ஒஸ்ரியோ பொரோஸிஸ் பிணியினால் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு இவர்களின் எலும்பு வளர்ச்சி உள்ளியல்பாகப் பெற்ற மரபுவழி காரணிகளால் பாதிக்கப்படுவது காரணமாகிறது.***

**குறையுணவு**

போதுமானளவு கல்சியத்தை கொண்டிராத உணவு ஒஸ்ரியோபொரோஸிஸ் பிணிக்கு ஊக்கமளிப்பதாயிருக்கம்.

**அதிகம் புகைத்தல்**

புகையிலை புகைத்தல் ஒஸ்ரோஜின் மட்டத்தினை குறைவடையச் செய்து பெண்களின் மாதவிடாய் இறுதியை முன்கூட்டியே ஏற்படுத்தி விடலாம்.

**அதிகம் மதுவருந்தல்**

அதிகம் மது மருந்துவதால் உடலின் கலங்கள் எலும்புகளை உருவாக்கும் திறனை இழந்து விடுகின்றன.

**ஸ்ரீரொய்ட்டுகள் (Cortisone)**

தொடர்ச்சியாக ஒரு நீண்ட காலத்திற்கு பிரிட்னிசொலோன் (Prednisolone) உள்ளெடுக்கும் ஒருவருக்கு ஒஸ்ரியோ பொரோஸிஸ் ஏற்பட இடமுண்டு.

**குடும்ப வரலாறு**

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலர் ஒஸ்ரியோ பொரோஸிஸ் பிணியினால் பாதிக்கப் படுகின்றனர். இதற்கு இவர்களின் எலும்பு வளர்ச்சி உள்ளியல்பாகப் பெற்ற மரபுவழி காரணிகளால் பாதிக்கப்படுவது காரணமாகிறது.

**முன்னைய முறிவுகள்**

சிறு எலும்பு முறிவுகளுடனிருப்பவர்கள் மேலும் ஒரு பெரிய முறிவு ஏற்படக் கூடிய ஆபத்தினைக் கொண்டிருக்கிறார்கள். முள்ளந் தண்டு எலும்புகளில் நெருக்க முறிவுகள் (Crush fracture) ஏற்பட்டு குட்டையாகியவர்கள் இவ்வகை ஆபத்துக்களை அதிகம் கொண்டிருப்பர்.

**ஒஸ்ரியோபொரோஸிஸ் இருப்பதற்கான அறிகுறிகள்**

ஒருவர் ஒஸ்ரியோபொரொஸிஸ் பிணியை கொண்டிருக்கிறார் என்பதை இலகுவில் கண்டறிந்து விட முடியாது. காரணம் நீண்ட காலத்திற்கு நோவுகளை ஏற்படுத்தாமலும் வெளிப்படையான நோய்க்குறிகளை காட்டாமலும் இது இருக்கக் கூடியது.

ஒரு எலும்பு முறிவு (பொதுவாக முள்ளந்தண்டு, இடுப்பு, மணிக்கட்டு) ஏற்பட்டவுடன் ஒஸ்ரியோ பொரோசிஸ் முதலில் இனங்கண்டு கொள்ளப்படுகிறது. வழமையில் அன்றாட நடவடிக்கைகளின் போது ஏற்படும் சிறியதான ஒரு புறவேதனையை தொடர்ந்து ஒஸ்ரியோ பொரோசிஸ் உடன் சம்பந்தப்பட்ட முறிவுகள் ஏற்படுகின்றன. பாரமான எதனையும் காவிச் செல்லும் போது அல்லது விழுதலின் போது உடற்செயற்பாட்டின் போது ஏற்படக்கூடிய முள்ளந்தண்டு நோ முள்ளந்தண்டில் ஏதேனும் முறிவு ஏற்பட்டிருப்பதை உணர்த்தும். பெரும்பாலும் இம் முறிகள் நோவின்றியே ஏற்படுகின்றன.

**ஒஸ்ரியோ பொரோஸிஸ் தவிர்க்க கூடியதா?**

உங்கள் வாழ்க்கையின் பல்வோறு கட்டங் களில் இதிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்குபல்வேறுவாய்ப்புகள் இருக்கின்றன்.

**நிறையுணவு**



உரியளவு கல்சியத்தை கொண்டிருக்கும் உணவு சிறுவர்களுக்கும் இளமைப் பருவத்தினருக்கும் அவசியம். பால், வெண்ணெய், யோக்கட் மற்றும் தகரத்திலடைக்கப்பட்ட மீன் வகைகள் கல்சியம் நிறைந்தவை. முழு ஆடைப்பால் மாவிலும் பார்க்க கொழுப்பு நீக்கிய பால் மற்றும் மோர் போன்றவற்றில் கல்சியம் அதிகம் உள்ளது. நீங்கள் 60 வயதிற்கு மேற்பட்டவராயின் தினமும் 1000 அல்லது 1500 மி.கி. கல்சியம் உட்கொள்வது நல்லது. அன்றாடம் உட்கொள்ளும் உணவு வகைகளுடன் ஒரு பைந்து அளவு பால் இதற்கு போதுமானது. பசுமையான இலைகளையுடைய காய்கறி வகை, பொன்னாங்காணிக் கீரை என்பவற்றில் கல்சியம் நிறையவேயுள்ளது.

டாக்டர் தலீஸ்
நோய் ஆலோசகர்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர ஆஸ்பத்திரி.


**சிறுவர் பயிற்சி**


சிறுவர்கள் விளையாட்டு பயிற்சிகளிலும் ஏனைய பயிற்சிகளிலும் ஈடுபட்டு எலும்புகளை வலும்படுத்தலாம்

**வயது வந்தோர் பயிற்சி**

வயது வந்தோர் உடல் ரீதியான பயிற்சிகளில் ஈடுபடல் வேண்டும். ஓரளவு சுமை தாங்குவது, நடத்தல், ஓடுதல் சிறந்த பயிற்சிகளாகும். —

(தொடரும்)





ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தலையிட வலியுறுத்தியும் ஈழத்தமிழர் பிரச்சினையில் தமது நிலைப்பாடு என்ன என்பது குறித்தும் தமிழ் நாட்டின் ஆளும் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் சென்னையில் நேற்று திங்கட்கிழமை மாலை மிகப் பிரமாண்டமான பொதுக் கூட்டம் நடைபெற்றது.

சென்னை மயிலாப்பூரில் நடைபெற்ற இந்த பொதுக் கூட்டத்தில் தி.மு.க தலைவரும் தமிழ்நாடு முதல்வருமான கலைஞர் மு.கருணாநிதி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் தமிழ்நாடு அமைச்சர்களான க.அன்பழகன், ஆற்காடு வீராசாமி உள்ளிட்ட தி.மு.க அமைச்சர்கள் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி உள்ளிட்ட தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள், மத்திய அமைச்சர்கள் மற்றும் தி.மு.க முன்னணி நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்றனர்.

இக்கூட்டத்திற்கு தி.மு.கவின் ஆதரவாளர்கள் பெருமளவில் திரண்டு ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. நிகழ்வில் கலந்து கொண்ட அரசியல் பிரமுகர்களை படங்களில் காணலாம்.

# பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## ஜனாதிபதி மகிந்த அழைப்பு

நாட்டில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளின் வெற்றிக்காக எல்லோரும் ஒன்றிணைய வேண்டியதன் அவசியத்தை நேற்றுக் காலை அநுராதபுரத்தில் இடம்பெற்ற புலிகளின் தற்கொலைத் தாக்குதல் உணர்த்துகிறது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாத்தறை, உயன்வத்தையில் காணியற்றோருக்கு காணிகளை வழங்கும் வைபவம் ஒன்றில் நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அங்கு தொடர்ந்தும் குறிப்பிடுகையில், வட மத்திய மாகாண சபையின் எதிர்கட்சித் தலைவர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உட்பட 28 பேர்களின் படுகொலைக்கும் இன்னும் பலர் காயமடைவதற்கும் காரணமாக அமைந்த புலிகள் மேற்கொண்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இத்தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு காயமடைந்தவர்கள் துரிதமாக குணமடைய வேண்டுமெனவும் பிரார்த்திக்கிறேன்.

வடக்கில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை இழந்து பாரிய பின்னடைவுகளைச் சந்தித்து வரும் புலிகள் நாட்டின் ஏனைய பகுதிகளில் வன்முறையைத் தூண்டிவிடும் முயற்சிகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பொதுமக்கள் மிகுந்த விழிப்புடன் இருக்க வேண்டும்.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா புலிகளுக்கு எதிராக வெலிஓயா மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் இடம்பெற்ற பல்வேறு படை நடவடிக்கைகளில் ஓர் இராணுவத் தளபதியாக இருந்து சேவையாற்றியவர் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

# ஜானக பெரேராவின் படுகொலை மிலேச்சத்தனமான செயல்

## ஜே.வி.பி கண்டனம்

(கொழும்பு)

வட மத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவரின் படுகொலையானது மிலேச்சத்தனமான செயற்பாடாகும். ஜனநாயகவாதியான மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா மீதான குண்டுத் தாக்குதலை ஜே.வி.பி வன்மையாகக் கண்டிக்கின்றது என்று அக்கட்சியின் பிரசாரச் செயலாளரும் கம்பஹா மாவட்ட எம்.பியுமான விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இந்த கண்டனத்தை தெரிவித்தார். விஜித்த ஹேரத் எம்.பி மேலும் கூறுகையில், ஜே.வி.பிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான அரசியல் கொள்கைகள் வேறுபட்டிருக்கலாம். ஆனாலும் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை.

அந்த வகையில் எமது தாய் நாட்டுக்காக களத்தில் நின்று போராடியவர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா ஆவார். இராணுவ சீருடையில் நாட்டுக்குச் சேவை செய்த அவர் தற்போது ஜனநாயக வழியில் தனது அரசியல் பயணத்தை மேற்கொண்டார்.

அவர் மீது மிலேச்சத்தனமான குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டமை ஜனநாயகவாதிகளை இல்லாதொழிக்கும் செயலாகும்.

அருவருக்கத்தக்க இந்தத் தாக்குதலை யார் மேற்கொண்டிருந்தாலும் இன்னும் சில தினங்களுக்குள் உண்மை வெளிவரவே செய்யும். இதனை மறைக்க முடியாது.

நாட்டைக் காப்பாற்றியவரும் அரசியல் பயணத்தில் ஜனநாயகப் போக்கை கடைப்பிடித்தவருமாகிய மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா மீதான குண்டுத் தாக்குதலையும் படுகொலையையும் ஜே.வி.பி மிக வன்மையாக கண்டிக்கிறது என்றார். (ச)

# ஓய்வு பெறுவது சச்சினின் விருப்பம்

## மெக்ராத், ரிச்சர்ட்ஸ், சேவாக் கூறுகின்றனர்



(புதுடில்லி)

கிரிக்கெட் அரங்கில் எத்தனையோ ஜாம்பவான்கள் வந்து சென்று விட்டனர். ஆனால் 16 வயதில் தனது ஆட்டத்தை ஆரம்பித்த நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின், உலகின் தலைசிறந்த வீரராக இன்னும் தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

அவருக்கு யாரும் ஓய்வு அளிக்க முடியாது. ஓய்வு எடுக்கும் முடிவை அவரது விருப்பத்திற்கு விட்டுவிட வேண்டும் என மெக்ராத், ரிச்சர்ட்ஸ், சேவாக் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர். ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் பல்வேறு சாதனைகளுக்கு சொந்தக்காரர். 19 ஆண்டுகளாக கிரிக்கெட் அரங்கில் தலைசிறந்த வீரராக திகழ்கிறார். இவரது ஓய்வு குறித்து அதிகமாக பேசப்பட்டு வருகிறது.

இது குறித்து அவுஸ்திரேலியாவின் மெக்ராத், மேற்கிந்தியத் தீவுகளின் விவியன் ரிச்சர்ட்ஸ், இந்திய வீரர் சேவாக் ஆகியோர் ஒரு ஆங்கில பத்திரிகைக்கு அளித்த பேட்டியில்;

### மெக்ராத்

கிரிக்கெட் அரங்கில் அசைக்க முடியாத வீரர் சச்சின், இரண்டாவது இன்னிங்ஸில் இவர் சரியாக விளையாடுவதில்லை. தொடரின் இறுதிப்போட்டியில் சோபிக்க மாட்டார் என்று குறை கூறுகிறார்கள்.

புள்ளி விபரங்கள் அடிப்படையில் பல்வேறு சாதனைகளைப் படைத்த அவரை விமர்சனப்படுத்துவது மனதளவில் காயப்படுத்துவது போன்றது.

வயதளவில் அவர் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறும் கட்டத்தை நெருங்கிவிட்டார். பொருளாதாரத்திலும் போதுமான உயர்வு பெற்றுவிட்டார்.

மனதளவில் தனக்கு வலிமை உள்ளதாக கருதும் பட்சத்தில் அவர் தொடர்ந்து போட்டிகளில் தடையின்றி பங்கேற்கலாம். கிரிக்கெட் அரங்கில் 16 வயதில் காலடி வைக்கும்போது எப்படி இருந்தாரோ ? அதே மகிழ்ச்சியுடன் தான் சச்சின் தற்போதும் உள்ளார் என்றார்.

### விவியன் ரிச்சர்ட்ஸ்

கிரிக்கெட்டின் மீது அதிக ஈடுபாடு கொண்ட சச்சின் தற்போதைக்கு ஓய்வுபெற அவசியம் இல்லை. ஒரு திறமையான வீரர் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாவது இயல்பு.

சச்சின் இன்னமும் இரண்டு ஆண்டுகள் கிரிக்கெட்டில் பங்கேற்கலாம். இதன் மூலம் ரசிகர்களுக்கு கிரிக்கெட் மீதுள்ள உற்சாகத்தை அதிகப்படுத்த முடியும் என மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் சிறந்த துடுப்பாட்ட வீரரான விவியன் ரிச்சர்ட்ஸ் தெரிவித்தார்.

### சேவாக்

கிரிக்கெட் உலகில் கடவுள் சச்சின். கிரிக்கெட் அரங்கில் இன்னமும் அதிக ஓட்டங்கள் அவர் சேர்க்கவேண்டும் தவிர அவர் மனம் விரும்பும் வரை அதிக ஆண்டுகள் கிரிக்கெட் விளையாட வேண்டும்.

விமானத்துக்காக காத்திருக்கும்போது, விமானத்தில் பயணம் செய்யும்போது யாரும் கிரிக்கெட் பற்றி பேச மாட்டார்கள்.

ஆனால் சச்சின் அப்போதும் கிரிக்கெட் பற்றித்தான் பேசுவார்.

அவர் கிரிக்கெட் விளையாடுவதற்காகவே பிறந்தவர் என கருதுகிறேன். விளையாட்டின் நுணுக்கங்கள், திறமைகள் ஆகியவற்றை அவரிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என விரும்புகிறேன்.

### நம்பர் -1 வீரர்

உலகின் சிறந்த 100 கிரிக்கெட் வீரர்கள் பட்டியலில் சச்சினுக்கு முதலிடம் அளித்துள்ளார் அவுஸ்திரேலியாவின் சுழல் மன்னன் ஷேன் வோர்ன்.

தனது ஷேன் வோர்ன் செஞ்சுரி என்ற புத்தகத்தில் சச்சினுக்கு அடுத்து மேற்கிந்தியத் தீவுகளின் லாராவைக் குறிப்பிட்டுள்ளார்.

முதல் -100 பட்டியலில் இந்தியா சார்பில் கபில்தேவ், கங்குலி, ராவிட், லக்ஸ்மன், ஹர்பஜன், சேவாக், கும்ளே, அசாருதீன், வெங்சர்க்கார், ரவிசாஸ்திரி உள்ளிட்ட 10 பேர் இடம் பெற்றுள்ளனர். அத்துடன் இலங்கை அணியில் 8 வீரர்கள் உள்ளடங்கியுள்ளனர். (5)

# இந்திய டெஸ்ட் அணியில் மீண்டும் இடம் கிடைக்கும்

## யுவராஜ்சிங் நம்பிக்கை

இந்திய கிரிக்கெட் அணியின் சிறந்த அதிரடி துடுப்பாட்ட வீரர் யுவராஜ்சிங் இருபது-20 உலக கோப்பையில் இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் 6பந்தில் 6சிக்சர் அடித்து முத்திரை பதித்தார்.

டெஸ்ட் அணியில் இடம் பெற்று இருந்த அவர் சமீபத்தில் நீக்கப்பட்டார். இலங்கையில் சமீபத்தில் நடந்த தொடரில் நீக்கப்பட்டார்.

தற்போது அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெற இருக்கும் டெஸ்ட் தொடரில் முதல் இரண்டு போட்டிக்கான அணியில் இடம் பெறவில்லை. அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஐதராபாத்தில் நடந்த 4 நாள் பயிற்சி ஆட்டத்தில் கிரிக்கெட்சபைத் தலைவர் லெவின் அணிக்கு யுவராஜ்சிங் தலைமை தாங்கினார்.

அந்த ஆட்டம் சமனிலையில் முடிந்தது. நேற்று முன்தினம் ஆட்டத்தில் யுவராஜ்சிங் முத்திரை பதித்தார். சதம் அடித்து தனது ஆட்டத் திறனை வெளிப்படுத்தினார்.

போட்டி முடிந்ததும் யுவராஜ்சிங் நிருபர்களிடம் கூறியதாவது,

சதம் அடித்தது எனக்கு இரட்டை மகிழ்ச்சி. ஐதராபாத் எனக்குபிடித்த மைதானம் என்பதால் சதம் அடித்தது மிகுந்த சந்தோஷம்.

இந்த சதம் மிகவும் முக்கியமானது. சரியான நேரத்தில் அடித்துள்ளேன். எனது துடுப்பாட்டம் மிகுந்த மனநிறைவை தருகிறது.

மீண்டும் நல்ல நிலைக்கு திரும்புவேன் என்ற நம்பிக்கை இருந்தது. இதன் மூலம் டெஸ்ட் அணியில் மீண்டும் இடம் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

கடந்த முறை அவுஸ்திரேலியா வந்த போது தொடரை கைப்பற்றியது. கும்ளேயும், ஹர்பஜன்சிங்கும் எந்த துடுப்பாட்டவீரர்களுக்கும் நெருக்கடி கொடுக்க கூடியவர்கள்.

இரு அணிகளுக்கும் இந்த டெஸ்ட் தொடர் சவால் நிறைந்தது. அவுஸ்திரேலியா அணி சிறந்த வேகப்பந்து வீச்சை கொண்டது. ஆனால் அந்த அணியின் சுழற்பந்து வீச்சு சிறப்பாக இல்லை. இவ்வாறு யுவராஜ்சிங் கூறினார். (5)

## தற்கொலைத் தாக்குதலை விசாரிக்க 10 விசேட குழுக்கள்

(கொழும்பு)

அநுராதபுரத்தில் நேற்றுக் காலை இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்த 10 விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

இத் தற்கொலைத் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மாஅதிபரினால் விடுக்கப்பட்ட பணிப்புரைக்கமைய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயந்த கமகே அநுராதபுரத்திற்குச் சென்றுள்ளார்.

இத் தாக்குதல் தொடர்பாகப் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் அதேவேளை அரசாங்கப் பகுப்பாய்வாளரும் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-5)

# தொடர்ந்து போரிட நினைத்தால் தினசரி 30 புலிகள் பலியாவர்!

## இராணுவத் தளபதி பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் வடக்குப் பகுதியிலிருந்து தப்பித்து ஓடிவிடலாம் என்று இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார் என தினமணி செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்குப் பகுதியில் இராணுவம்முன்னேறி வருகின்றது. இதனால் பிரபாகரன் அங்கிருந்து தப்பியோட வாய்ப்பிருக்கிறதா என இலங்கை அரசு பத்திரிகையின் செய்தியாளர் கேட்டதற்குப் பொன்சேகா இவ்வாறு தெரிவித்தார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் தாக்குதலை தாக்குப் பிடித்து பிரபாகரனால் நீண்டகாலம் பதுங்கியிருக்க முடியாது. பிரபாகரன் தனது நிலையையும் தனது அமைப்பைச் சார்ந்தவர்களின் நலனையும் கருத்தில் கொண்டு ஒரு நல்ல முடிபை எடுக்க இதுதான் சரியான தருணம்.

இதைப் பிரபாகரன் உடனடியாக உணர வேண்டும். இல்லையேல் இராணுவத்துடன் போரிடுவதில் பயனில்லை என்பதை விரைவில் அவருக்கு உணர்த்த வேண்டியிருக்கும்.

இராணுவத்துடன் அவர் தொடர்ந்து போரிட நினைத்தால் தினசரி 20 முதல் 30 புலிகளை அவர் எங்களின் போர்ப் பசிக்கு இரையாக்க வேண்டியிருக்கும் என்றும் பொன்சேகா சவால் விடுத்தார்.

விடுதலைப்புலிகளுக்கு சர்வதேச அளவில் உள்ள பல்வேறு தீவிரவாத அமைப்புக்களுடன் தொடர்பிருக்கின்றது. எனவே அந்த அமைப்புக்கள் செயற்படும் நாடுகளுக்குப் பிரபாகரன்தப்பித்துப் போகவாய்ப்பிருக்கின்றது.

இல்லையேல் அந்த அமைப்புக்களே தாங்களாக முன்வந்து பிரபாகரனை அழைத்துக் கொள்ளலாம் என்றும் அவர் கூறினார். இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் கடந்த இரண்டாண்டுகளாக நடந்த போரில் மட்டும் சுமார் 11 ஆயிரம் புலிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

புலிகள் வலுவாகவுள்ள பகுதியாகக் கருதப்பட்ட சில பகுதிகளையும் இராணுவம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. புலிகளுக்கு இது துரதிர்ஷ்டமான நேரம். தற்போதைய நிலைவரப்படி புலிகள் இயக்கத்தில் 4 ஆயிரம் பேர்தான் உள்ளனர்.

தங்கள் இயக்கத்துக்குப் புதிதாக ஆட்சேர்க்கும் பணியை வேண்டுமானால் அவர்கள் மேற்கொள்ளலாம். அதையே அவர்கள் எத்தனை நாள் செய்ய முடியும் என்றும் பொன்சேகா கேள்வி எழுப்பியுள்ளார்.

புலிகளின் முக்கிய தளமான கிளிநொச்சியை இராணுவம் நெருங்கி வருகின்றது. அந் நகரைக் கைப்பற்றி விட்டால் பிரபாகரன் ஒரு அகதியைப் போல வாழ வேண்டியிருக்கும் என்றும் பொன்சேகா தெரிவித்தார் எனத் தினமணிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## சுய கட்டுப்பாட்டை கடைப்...

இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இரு நாடுகளையும் பிரிக்கும் பாக்கு நீரிணைப் பகுதியில் இலங்கைக் கடற்படையினர் என்று கூறப்படுபவர்களால் இந்திய மீனவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் தொடர்வதாகவும் இந்திய அதிகாரிகள் கடுமையான கவலையை வெளியிட்டுள்ளனர்.

**பிரதமருடன் தமிழக முதல்வர் தொலைபேசி உரையாடல்**

இதேவேளை தமிழக முதல்வர் கருணாநிதி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இலங்கைத் தமிழர் பாதிக்கப்பட்டு வருவது குறித்து இந்திய அரசு இலங்கைத் தூதரை அழைத்துத் தனது கவலையையும் கண்டனத்தையும் வெளிப்படுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதனை மன்மோகன் சிங் கரிசினையுடன் கேட்டதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது. இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தலையிட்டுப் போர் நிறுத்தத்தை வலியுறுத்த வேண்டும் என்று கோரி தமிழக மக்கள் இந்தியப் பிரதமருக்குத் தந்தி அனுப்ப வேண்டும் என கருணாநிதி ஞாயிறன்று அறிக்கை வெளியிட்டிருந்தார். ஞாயிறன்றைய அறிக்கையிலும் நேற்றைய தொலைபேசி உரையாடலிலும் இலங்கையில் நடப்பதை இனப்படுகொலை என்று கருணாநிதி வர்ணித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## எம்.பியாகிறார் கருணா...

விநாயகமூர்த்தி முரளிதரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் இன்று நாடாளுமன்ற உறுப்பினராகச் சத்தியப் பிரமாணம் செய்யவுள்ளார். விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதியாக முன்னர் செயற்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரன், அதிலிருந்து பிரிந்து சென்று தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் என்ற அரசியல் கட்சியை உருவாக்கியமை குறிப்பிடத்தக்கது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கருணா அம்மான், சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரித்துறை அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இதேவேளை எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு மட்டக்களப்பு மாவட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றம் செல்ல இருப்பதாகப் பிரித்தானியாவிலிருந்து நாடு திரும்பிய போது கருணா அம்மான் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-3,5)

## சடலங்களின் சூடு தணிவதற்கு...

என்பதுடன் கட்சி காரியாலய திறப்புவிழா தொடர்பில் பாதுகாப்பு தரப்பினருக்கு எதுவுமே தெரியாது என்றால் தேசிய புலனாய்வு பிரிவு எதற்கு என்றும் கேள்வி எழுப்பினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது,

நாட்டை பாதுகாப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட தேசிய வேலைத்திட்டத்தின் தேசிய வீரரை நாடு இழந்துவிட்டது. படையில் இருந்த போது தேசிய வீரராக தென்பட்ட மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து போட்டியிட்ட போது தேசத் துரோகியாகத் தென்பட்டார்.

அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக தெரிந்துகொண்டே பாதுகாப்பு அமைச்சின் பிரதான தலைமைப்பீட்டினால் அவருக்கான பாதுகாப்பு குறைக்கப்பட்டது.

தற்கொலை குண்டுதாரிகள் நுழைந்துள்ளனரா? தமிழர்கள் பதியப்பட்டுள்ளனரா? இனந்தெரியாதோர் நுழைந்துள்ளனரா? என்று அநுராதபுர மாவட்டத்தில் கடந்த வாரம் சோதனை நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்ட நிலையில் இவ்வாறான தாக்கு தல்கள் மேற்கொள்ளப்பட்டமை எவ்வாறு? புலிகளுக்கு எதிராக இராஜதந்திர நடவடிக்கையை முன்னெடுத்தவரே பலியெடுக்கப்பட்டுள்ளார்.

இது தற்கொலையா? என்பது தொடர்பில் உரிய தகவல்கள் கிடைக்கவில்லை எனினும் தாக்குதல் தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன. விசாரணைகள் ஆரம்பிப்பதற்கு முன்னரும் சடலங்கள் எடுத்துச் செல்வதற்கு முன்னரும் குற்றவாளிகள் இனங்காணப்பட்டமை எவ்வாறு? என்பதுடன் பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன என்றார். (ச)

## அலுவலகத் திறப்பு விழாவில்...

வட மத்திய மாகாணத்தில் அநுராதபுரத்தில் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத் திறப்பு விழாவின் போது நேற்றுக் காலை 8.45 மணியளவில் நடாத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் வட மத்திய மாகாண சபையின் புதிய எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா, அவரது மனைவி உட்பட 28 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தில் சிரச தொலைக்காட்சியின் பிராந்திய செய்தியாளரான ரஷ்மி மகரூப் என்பவரும் கொல்லப்பட்டுள்ளார். மேலும் 86 பேர் காயமடைந்திருப்பதாகவும் காயமடைந்தவர்கள் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர்களில் 15 பேர் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் அநுராதபுரம் வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்திருக்கின்றார்.

வட மத்திய மாகாண சபையின் புதிய எதிர்க்கட்சித் தலைவராகிய மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா புதிய அலுவலகத் திறப்பு விழா நடைபெற்று முடிந்து முக்கியஸ்தர்கள் எல்லோரும் ஒன்றுகூடி பேசிக் கொண்டிருந்த போது அங்கு அவசர அவசரமாகக் கூட்டத்திற்குள் புகுந்த தற்கொலையாளியே இந்தக் குண்டுத் தாக்குதலை நடத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலை விடுதலைப்புலிகளே நடத்தியிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது. எனினும் இது குறித்து விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து தகவல்கள் எதுவும் உடனடியாக வெளியாகவில்லை.

இந்த அலுவலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டவர்களில் ஒருவராகிய அநுராதபுர பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினராக மொகமட் முஸாபிக் காயமடைந்து அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அநுராதபுரம் மாவட்ட அமைப்பாளர் ஆகிய டாக்டர் ஜோன் பிள்ளை, அவரது மனைவி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சாந்த புஞ்சிகேவா ஆகியோரும் உயிரிழந்துள்ளனர்.

சாந்த புஞ்சிகேவாவின் மெய்ப் பாதுகாவலரும் வாகனச் சாரதியுமாகிய நிமல் சிறி என்பவரும் அநுராதபுரத்திற்குச் சென்றிருந்தார். இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் அவர் நூலிழையில் காயம் எதுவுமின்றி உயிர் தப்பியிருக்கின்றார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக அவர் பி.பி.சியிடம் தெரிவித்ததாவது,

கூட்டத்தின் கடைசியில் நன்றியுரை நடந்து கொண்டிருந்தபோது நிமால் உள்ளே வந்து தேநீர் குடி என்று ஐயா என்னைக் கூப்பிட்டார். அதன் பின்னர் புறப்படுவோம் என ஐயா கூறியிருந்தபடியினால் வாகனத்தை ஸ்ராட் செய்து விட்டு நான் அந்தக் கட்டடத்தினுள்ளே சென்றேன்.

அங்கேயிருந்த சிறிய கேட் வழியாக நான் உள்ளே போனதும் திடீரென பாரிய குண்டுச் சத்தம் கேட்டது. குண்டுச் சத்தத்தோடு அந்த இடம் ஒரே புகை மண்டலமாகி விட்டது. எதையுமே பார்க்க முடியவில்லை. நான் உடனே அங்கிருந்த தடுப்புச் சுவர் ஒன்றின் பின்னால் மறைந்து என்ன நடக்கின்றது எனப் பார்த்த போது எல்லோரும் வெளியே ஓடிக் கொண்டிருந்தார்கள்.

எல்லோருடைய உடல்களிலும் இரத்தம் காணப்பட்டது. அங்கேயிருந்த தளபாடங்கள் எல்லாம் கண்டபடி சிதறி விழுந்ததையும் காயமடைந்தவர்கள் சிலர் நிலத்தில் வீழ்ந்து கிடந்ததையும் நான் கண்டேன்.

நான் உடனே ஐயா இருந்த இடத்திற்குத் தேடிச் சென்றேன். அவர் அங்கே கீழே விழுந்து கிடந்தார். நான் ஓடிச் சென்று அவரைத் தூக்கினேன். அவர் அம்மா அம்மா என்று வேதனையில் முனங்கினார்.

நான் உடனே அவரைத் தூக்கியவாறு வெளியே வந்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு உதவி செய்யுமாறு சத்தம் போட்டேன். யாருமே உதவிக்கு வரவில்லை. எல்லோருமே அவசர அவசரமாக ஓடிக் கொண்டிருந்தார்கள்.

மிகவும் சிரமப்பட்டு அவரைத் தூக்கிக் கொண்டு வாகனத்தின் அருகில் நான் வந்த போது ஒருவர் ஐயாவை வாகனத்தில் ஏற்றுவதற்கு உதவி செய்தார். உடனே அவரை நான் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றேன். அங்கு சென்றபோதுதான் அவர் வழியிலேயே இறந்து விட்டதாகத் தெரிவித்தார்கள் என நிமல் சிறி கூறினார்.

இதேவேளை காயமடைந்த 86 பேர் அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள். காலை 8.50 மணியிலிருந்து 9 மணி வரையிலே 10 நிமிடத்திற்குள்ளே இந்த நோயாளர்கள் இங்கே கொண்டு வந்து அனுமதிக்கப்பட்டார்கள் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர்களில் 15 பேர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை குண்டுத் தாக்குதலையடுத்து அநுராதபுரத்தில் வாகனப் போக்குவரத்து மற்றும் மக்கள் நடமாட்டத்திற்குத் தடை செய்யப்பட்டிருந்தது.

பொலிஸாரும் இராணுவத்தினரும் அந்த இடங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (ச-3,5)

DV 2010க்கான அமெரிக்கா லொத்தர் விசா



DV 2010 அமெரிக்கா லொத்தர் விசாவிற்கான விண்ணப்பங்களை எமது நிறுவனத்தினூடாக அனுப்பிக்கொள்ளப்படும். மற்றும் இதற்கான மேலதிக விபரங்களை எமது நிறுவனத்தினுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் கம்பியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

மகளிருக்கான 3 மாத பயிற்சிகள்

கலாலயா

பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில் – யாழ்ப்பாணம்

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய வகுப்புக்களில் சனி, ஞாயிறு பிரிவுகளில் கேக் ஐசிங், கூந்தல் அலங்காரம், தையற் பயிற்சிகளுக்கும், கிழமை நாள் பிரிவுகளில் தையல், பூப்பின்னல் தீட்டுதல் பயிற்சி களுக்கும் மேலும் குறிப்பிட்டளவு புதிய மாணவிகள் உடன் அனுமதிக்கப் படவுள்ளனர்.

பதிவாளர்.

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.